Tamil Heritage Foundation International Digital Library EBook collection

Reg. No. M. 1434 தனிப்பிரதி அணா 0—1—6

# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 4-0-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 5-0-0.

திங்கட்கிழமை தோறும் வெளிவரும்,

## வாரப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

ரு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன் விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 8-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-8-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 8 | கலியப்தவருஷம் 5027 அக்ஷய ஹு ஆவணி மீ 14 உ திங்கட்கிழமை 1926ஹு ஆகஸ்டு மீ 30 உ | இதழ் 2

வெடிக்காரத்தைலம் என்ற
## சர்வஜன்னி நிவாரணத் தைலம்.

உலகப்பிரசித்தி பெற்ற நமது சர்வஜன்னி நிவாரணத்தைலம்சாஸ்திர ஆராய்ச்சியின்படி கிடைக்கிறதற்கு அருமையானதும், சிலாக்கியமானதுமான மூலிகைகளினாலும் விலையுயர்ந்த கடைச் சரக்குகளினாலும் தயாரிக்கப்பட்டது. இத்தைலம் நமது குடும்பத்தில் சுமார் 75 வருஷகாலமாக பரம்பரையாக கையாளப்பட்டு வருகிறது. சுமார் 30 மைல் சுற்றளவுள்ள கிராமவாசிகளுக்கு நமது தைலத்தின் அருமை பெருமை தெரிந்து சிலாக்கியமாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். மேலும் விருதுநகர், மதுரை திருநெல்வேலி, கொழும்பு, ரங்கூன் முதலான இடங்களிலும் நமதுதைலம் பரவியிருக்கிறது.

இத்தைலத்தின் அருமையான குணங்களாவன:— சிசுக்களுக்கு மாந்தம் வலிப்பு, கிருமிப் பூச்சி, இளைப்பு, பிரசவகாலத்தில் ஜன்னி முதலானவைகளுக்கும் மற்றும் இருபாலர்களுக்கும், மந்தாரகாசம், க்ஷயம், கை, கால் உளைதல், பிடரிவலி முதலியவைகளுக்கு இன்றியமையாத தைலம். இதை ஒருதடவை உபயோகித்தால் இதன் அருமைபெருமைகள் நன்குவிளங்கும். கால்ரா காலங்களில் தொண்டைவலிப்பு, ஜன்னி முதலியவைகளுக்கு சிறந்த சஞ்சீவித்தைலம்.

ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 0—5—0

உபயோகிக்கும் விதம் முதலானவைகள் புட்டியுடன் அனுப்பப்படும்.

கோ. க. கா. முகம்மதுஇஸ்லாம் ராவுத்தர்
சின்னப்புளியம்பட்டி கல்லூர்
அருப்புக்கோட்டை.

## நாடார்பாங்குலிமிட்டெட்,
## தூத்துக்குடி.

## விசேஷ வட்டி.

"நாடார் பாங்கு லிமிட்டெட்டில் ஒரு வருஷத்துக்குக் குறையாமல் தவணைக்குப் போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் நூறுக்கு ரூ 6 வீதமும், இரண்டு வருஷத்திற்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் நூறுக்கு ரூ 6½ வீதம் வட்டி கொடுக்கப்படும்."

விசேஷமாய் மைனர்கள், விதவைகள், பள்ளிக்கூடங்கள், பேட்டைகள் மகமை முதலிய பொது ஸ்தாபனங்களின் பணத்தை பந்தோபஸ்தாயும் நல்லவட்டியிலும் வைப்பதற்கு இதுவே ஏற்றஇடம். அவரவர்களுக்கு வேண்டிய பிரகாரம் மைனர்கள், கார்டியன்கள், அல்லது காரியதரிசிகள், பெயரால் கணக்குவைத்து யாரிடம்வட்டியும் முதலும் கொடுக்க விருப்பமோ அவ்விதம்கொடுக்க ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

மற்றும் விபரங்களைப்பற்றி ஏஜெண்டுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

No. 1.
பட்டணம் பொடி

உலகெங்கும் புகழ் பெற்று
24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற
மதராஸ்
என். வி. ஷண்முகம் கம்பெனியார்

தந்தி விலாசம்
'மூக்குத் தூள்'
தபால் பெட்டி
நிர். 555
மதராஸ்.

# பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழ்கின்றன.
ஒவ்வொரு இந்தியரின் மனத்தையும் குதூகலிக்கச் செய்கிறது.
மாரிகாலத்துக்கு ஏற்றவாறு காரம் மணம் ததும்பும்படி தயாரிக்கப்படுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 2-ம் பாகம்.

### 13-வது அத்தியாயம்.

டிரான்ஸ்வாலிலும் ஆரஞ்சு பிரிஸ்டேட்டிலும் இருந்த இந்தியர்களின் நிலைமையை விவரமாக எடுத்துக்கூற இங்கே இடமில்லை. அதைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள விரும்புவோர் நான் எழுதிய "தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹ வரலாறு" என்னும் புத்தகத்தைப் படிப்பார்களாக. ஆனால் இங்கே அதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுதல் அவசியமாகும்.

ஆரஞ்சு பிரீஸ்டேட்டில் 1888ல் இயற்றப்பட்ட ஒரு விசேஷ சட்டத்தினால் இந்தியர்களுடைய உரிமைகள் எல்லாம் பிடுங்கப்பட்டன. அங்கே இந்தியர்கள் இருந்தால் ஹோட்டல் வேலைக்காரர்களாகவோ, வேறு சிற்றூழியம் செய்பவர்களாகவோ இருக்கலாம். பெயருக்கு நஷ்டஈடு என்று கொடுத்து வியாபாரிகள் துரத்தப்பட்டனர். அவர்கள் செய்து கொண்ட விண்ணப்பங்கள் எல்லாம் பயன்படாதொழிந்தன.

டிரான்ஸ்வாலில் 1885-ல் ஒரு கடுமையான சட்டம் செய்யப்பட்டது. 1886-ல் இச்சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. திருத்திய சட்டத்தின்படி டிரான்ஸ்வாலில் நுழையும் ஒவ்வோர் இந்தியனும் மூன்று பவன் தலைவரி கொடுக்கவேண்டும். அவர்களுக்கென்று ஒதுக்கிவைத்த இடங்களில்தான் அவர்கள் நிலம் வைத்துக்கொள்ளலாம். அங்கேயும் நிலம் உண்மையில் அவர்களுக்குச் சொந்தமாகாது. அவர்களுக்கு வாக்குரிமையும் இல்லை. ஆசியாக்காரர்களுக்கென்று ஏற்பட்ட இந்த விசேஷ சட்டத்தைத்தவிர, கறுப்பு மனிதர்களுக்குப் பொதுவாக ஏற்பட்ட பிற சட்டங்களுக்கும் இந்தியர் உட்பட வேண்டியவர்களாயிருந்தது. இவற்றின்படி இந்தியர்கள் பொது நடைப் பாதைகளில் நடக்கக்கூடாது. இரவு 9-மணிக்கு மேல் அநுமதிச் சீட்டில்லாமல் வெளியே புறப்படக்கூடாது. ஆனால் இந்தக் கடைசி விதி இந்தியர்கள் விஷயத்தில் சமயோசிதம்போல் பிரயோகிக்கப்பட்டது. "அராபியர்" என்று கூறிக் கொண்டவர்கள் மீது அதிகாரிகள் தயவு வைத்து இதைப் பிரயோகிப்பதில்லை. ஆனால் இவ்வாறு விலக்குச் செய்வது போலீசாரின் சித்தத்தையே முழுதும் பொறுத்திருந்தது.

இவ்விருவகைச் சட்டங்களின்கீழும் நான் வரவேண்டியிருந்தது. அடிக்கடி இரவில்மிஸ்டர்கோடெஸ்ஸுடன் உலாவச் செல்வது வழக்கம். இரவு பத்துமணிக்கு முன்னால் வீடு திரும்புவதில்லை. போலீஸார் என்னைக் கைதுசெய்தால் என் செய்வது? என்னைவிட மிஸ்டர் கோடெஸுக்கு இதைப்பற்றிக் கவலை அதிகமாயிருந்தது. அவருடைய நீக்கிரோ வேலைக்காரர்களுக்கு அவர் அநுமதிச்சீட்டு வழங்குவது வழக்கம். ஆனால் எனக்கு அத்தகைய அநுமதிச் சீட்டு வழங்குதல் முறையாகுமா? அப்படிச் செய்தல் மோசம் செய்வதாகும்.

எனவே, மிஸ்டர் கோடெஸோ, அவருடைய நண்பர் ஒருவரோ நன்கு நினைவில்லை—அரசாங்க அட்டர்னியான டாக்டர் கிராஸே என்பாரிடம் என்னை அழைத்துச் சென்றார். அவர் என்னோடு சேர்ந்து பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்தவர் எனத் தெரியவந்தது. இரவு 9-மணிக்குப் பிறகு நான் வெளியே புறப்படக் கூடாதென்று அறிந்ததும் அவர் ஆச்சரியமும் ஆத்திரமும் அடைந்தார். என்னிடம் அநுதாபமும் காட்டினார். பிறகு போலீஸ் தொந்தரவின்றி எப்போது வேண்டுமென்றாலும் வெளியே போய் வரும் உரிமைப்பத்திரம் ஒன்று வழங்கினர். இந்த உரிமைப்பத்திரத்தை வெளியே போகும் போதெல்லாம் எடுத்துச் சென்றேன். ஆனால் அதை [illegible]

டாக்டர் கிராஸே என்னைத் தம் வீட்டுக்கு அழைத்தார். நாங்கள் இருவரும் நண்பர்களானோம் என்றும் சொல்லலாம். எப்போதாவது அவர் வீட்டுக்குப் போவேன். அவர்மூலமாகவே அவருடைய சகோதரருடைய பழக்கமும் எனக்கு ஏற்பட்டது. டாக்டர்கிராஸேயைவிட அவருடைய சகோதரர் அதிக புகழ்பெற்றவர். ஜோகானிஸ் பர்க்கில் அவர் பப்ளிக் பிராஸிகியூடரா யிருந்தார். போயர் யுத்தத்தின் போது ஓர் ஆங்கில உத்தியோகஸ்தரைக்கொலை செய்யச் சதியாலோசனை புரிந்ததாக அவர்மீது வழக்கு நடத்தி ஏழுவருடம் சிறைவாசம் விதித்தார்கள். வக்கீல் தொழில் நடத்தக்கூடாதென்றும், தடுக்கப்பட்டார். ஆனால் யுத்தம் நின்ற பிறகு அவர் விடுதலைசெய்யப் பட்டதுடன் மீண்டும் வக்கீல் தொழில் செய்யும் உரிமையும் அளிக்கப் பெற்றார். பிற்காலத்தில் இவர்களுடைய பழக்கம் எனக்கு நிரம்பப் பயன் தந்தது.

நிற்க, கால் நடைப் பாதைகளில் நடக்கக் கூடாதென்ற சட்டம் எனக்குப் பெரிதும் கஷ்டமளித்தது. நான் உலாவச்செல்லும் போதெல்லாம் அக்கிராசனர் தெருவழியாக ஒரு மைதானத்துக்குப் போவது வழக்கம். அக்கிராசனர் குரூகரின் வீடு அந்த வீதியில் தான் இருந்தது. அவ்வீடு நிரம்பச் சாதாரண மாயிருந்தது. பக்கத்திலிருந்த மற்ற வீடுகளுக்கும் அதற்கும் அதிகவித்தியாசம் தெரிவதில்லை. வீட்டைச்சுற்றி ஒரு தோட்டங்கூடக் கிடையாது. பிரிடோரியா லட்சாதிபதிகள் பலருடைய வீடுகள் அவருடைய வீட்டைவிட ஆடம்பரமாயிருந்தன. அக்கிராசனர் குரூகரின் எளிய வாழ்க்கை பிரசித்திபெற்ற தொன்று. அவர் வீட்டுக்கு முன்னால் போலீஸ் சேவகன் காவல் புரிந்தது ஒன்றுதான். அவ்வீடு யாரோ ஓர் உத்தியோகஸ்தருடையது என்பதைக் காட்டிற்று. அநேகமாக எப்போதும் நான் அவ்வீட்டுக்கு முன்னாலிருந்த கால் நடைப்பாதை வழியாக அச்சேவகனைக் கடந்தே செல்வது வழக்கம்.

காவற் சேவகர்கள் அடிக்கடி மாறுவார்கள். ஒரு சமயம் சேவகன் ஒருவன் சிறிதும் முன்னெச்சரிக்கை செய்யாமல், கால்நடைப் பாதையை விட்டு நகரும்படியும் சொல்லாமல் என்னைக் காலால் உதைத்துக் கையால் பிடித்துத் தள்ளினான். இது திடீரென்று நேரிட்டமையால் பிரமை கொண்டவன் போலானேன். நான் அவனை ஏதும் கேட்பதற்கு முன்னால் அப்பக்கமாக அதே சமயத்தில் குதிரை சவாரிசெய்து சென்ற மிஸ்டர் கோடெஸ் என்னிடம் வந்து "காந்தி, நான் எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன். அம்மனிதன் மீது வழக்குத்தொடுத்தால் நான் சாட்சியம் கூறத்தயார். இப்படி முரட்டுத்தனமாக உங்களை அம்மனிதன் அடித்துவிட்டது குறித்து நிரம்ப வருந்துகிறேன்" என்றார்.

"நீங்கள் வருத்தப்பட வேண்டாம். பாவம்! அவனுக்கு என்ன தெரியும்? கறுப்புமனிதர்கள் எல்லாரும் அவனுக்கு ஒன்றுதான். என்னை இப்போது நடத்தியது போலவே அவன் மற்ற நீக்கிரோவர்களையும் நடத்திவருகிறான் என்பதில் ஐயமில்லை. என்னுடைய சொந்தக்குறை எதற்காகவும் நான் நீதி மன்றத்துக்குப் போவதில்லையென்று உறுதி கொண்டிருக்கிறேன். எனவே அவன் மீது நான் வழக்குத் தொடுக்கப் போவதில்லை" என்று நான் கூறினேன்.

"உங்கள் அரிய குணத்துக் கேற்றவாறே சொல்கிறீர்கள். ஆனால் மறுபடியும் சிந்தியுங்கள். இப்படிப் பட்டவர்களுக்கு ஒரு பாடம் கற்பித்தால்தான் நலம்" என்று கூறிவிட்டுப் பிறகு அப்போலீஸ் காரனைக் கண்டித்தார். போலீஸ்காரன் போயர் ஆகவின் அவர்கள் டச்சுபாஷையில் பேசினார்கள். அவர்கள் சம்பாஷணை எனக்கு விளங்கவில்லை. ஆனால் முடிவில் அவன் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இதற்கு அவசியமேயில்லை. ஏனெனில் அவனை நான் முன்னமே மன்னித்துவிட்டேன்.

அந்த வீதி வழியாகப் பின்னர் நான் போவதேயில்லை. அந்தச் சேவகனுடைய ஸ்தானத்துக்கு வெவ்வேறு சேவகர் வரக்கூடும். அவர்களுக்கு இந்நிகழ்ச்சி தெரிய நியாயமில்லை, அவர் [illegible]

லாமன்றோ? வீணாக இன்னும் ஓர் உதையை வலிய வாங்கிக்கொள்வதில் என்ன பயன்? எனவே வேறு வழியாகப் போகத் தொடங்கினேன்.

இந்நிகழ்ச்சியின் பயனாக இந்தியர்களிடம் எனக்கு அநுதாபம் அதிகமாயிற்று. இந்தச் சட்டங்கள் சம்பந்தமாக பிரிட்டிஷ் ஏஜண்டைக் கண்டு பேசி, பரீட்சார்த்தமாக ஒரு வழக்கு நடத்திப் பார்க்கலாமாவென்று அவர்களுடன் கலந்து யோசித்தேன். இவ்வாறு தென்னாப்பிரிக்கா இந்தியர்களைப்பற்றிப் படித்தும், கேட்டும் தெரிந்துகொண்டதுடன், சொந்த அநுபவத்தினாலும் அவர்களுடைய நிலையை நன்கறிந்து கொண்டேன். தன் மதிப்புள்ள இந்தியன் வசிப்பதற்குத் தென்னாப்பிரிக்கா தக்க இடமில்லையென அறிந்தேன். இந்நிலையை எப்படி மாற்றலாம் என்பது குறித்து மேலும் மேலும் சிந்திக்கலானேன். ஆனால் இப்போது தாதா அப்துல்லாவின் வழக்கைக் கவனிப்பதே என் முதன்மையான கடமையாயிருந்தது.

## தென்றல்.

எலிகள் மிகுந்த தந்திர முள்ளவையென்று மேல் நாட்டுப் பண்டிதர்கள் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள்.

***

தற்கால நவீன ஆராய்ச்சியின் பயனாக மக்கள் கிழத்தன்மை யெய்தாமல் என்றும் இளமையுடன் வாழலாமென்று ஸர். ஆல்பிரட் மாண்டு என்ற பார்லிமெண்டு மெம்பர் கூறுகிறார்.

***

ஸ்ரீ கிருஷ்ணன் சிந்து நாட்டில் ஒரு மாதின் நாசி வழியாக ஜூலை மாதம் 30-ந் தேதி பூலோகத்தில் தோன்றப் போவதாக ஒரு பெரிய வதந்தி ஏற்பட்டிருந்ததாம். சமீபத்தில் கணவனை யிழந்த அந்த மாது உலகக் கவலைகளை யெல்லாம் துறந்து தனிமையில் இருந்து தியானஞ் செய்து கொண்டிருந்தாள். அவள் கனவில் கிருஷ்ணனும் தோன்றித் தான் அவளிடம் தோன்றப் போவதாகத் தெரிவித்தாராம். அதற்கு ஏற்றவாறு அந்த அம்மையின் உடலும் முகமும் மூக்கும் பெரிதாக வீங்கி வந்ததைக் கண்டு ஜனங்கள் கூட்டம் கூட்டமாக அவளைக் காணச் சென்றார்கள். ஆனால் குறித்த நாளில் கிருஷ்ணன் தோன்றவில்லை. பொய்கை ஒன்றில் நீராடிய ஒரு மாது அங்கு பூத்திருந்த தாமரைப் பூ ஒன்றைக் கொய்து முகர்ந்த பொழுது அவள் நாசிவழியாகக் கிருஷ்ணன் உலகத்தில் தோன்றியதாக ஒரு புராணக் கதை சிந்து நாட்டில் வழங்கி வருகிறதாம். சிந்து நாட்டில் கிருஷ்ணன் தோன்றப் போகிறானோ இல்லையோ அடுத்த வாரத்தில் பாலகிருஷ்ணன் பூலோகத்திலே கோடானு கோடி மக்களின் உள்ளங்களில் தோன்றி ஆனந்த நடனம் புரிவான் என்பது உறுதி.

***

எகிப்து நாட்டிலே வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும் பிரமிது என்ற பிரேத கோபுரத்தைக் கட்டிய மூற்கால எகிப்தியர்கள் பிற்காலத்தில் நெடுங் காலத்திற்குப் பின் நிகழக் கூடிய சில முக்கிய சம்பவங்களை அதில் குறித்திருக்கிறார்களாம். ரெவரண்டு வால்டர் வின் என்ற பாதிரியாரும், காப்டன் நீம் என்ற தளபதியும் இதைப்பற்றி நீண்ட ஆராய்ச்சி செய்து சில உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் உயரமும் அகலமும் சிலஉண்மைகளை உணர்த்துகின்றனவாம். அதன் படி 1928-ம் ஆண்டு முடிவில் பெரியதோர் உலகப் பிரளயம் தொடங்கி 1936-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 16-ந் தேதி முடிவடையுமாம். அப்பொழுது கிறிஸ்துநாதர்—அல்லது எல்லாச சமயிகளும் எதிர் பார்க்கிற அவதார புருஷன் தோன்றி, உலகத்திலே அன்பும் அறமும் நிறைந்த புதியதோர் அரசை நிலவச் செய்வாராம். சென்ற 1914-ல் தொடங்கிய மகாயுத்தத்தை விளக்கும் குறிகளும், வேறு பல சம்பவங்களைக் குறிக்கும் சின்னங்களும் அதில் அமைந்திருக்கின்றனவாம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த அந்தக் காலத்து எகிப்தியரின் அற்புத அறிவை அவர்கள் வியந்து போற்றுகிறார்கள். தஞ்சாவூர்க் கோபுரத்திலே எதிர்கால நிகழ்ச்சிகளை உணர்த்தும் சில சின்னங்கள் இருப்பதாக நம்மவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அதனை ஆராய்ச்சி செய்வோர் அயல் நாட்டிலிருந்து இன்னும் வரவில்லை!

***

ஐரோப்பாவிலுள்ள டென்மார்க் நாட்டின் அரசர் ஐரோப்பிய மன்னர்களிலே மிகவும் நெடியவராம். பல வளங்களும் நிறைந்து ஜனங்கள் எல்லோரும் சௌக்கியமாக வாழும் நாடு டென் மார்க்கேயாகும். டென் மார்க்கிலுள்ள பல வீடுகளில் வேலைக்காரர்களென்ற பெயரே கிடையாதாம். வேலைக்காரர்களும் குடும்பச் சொத்தில் உரிமை கொண்டு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் வாழ்கிறார்களாம். அங்கே பசுக் காப்பு மிகவும் சிறந்த முறையிலே நடைபெறுகின்றது. பசுத் தொழுவங்களில் மின்சார விளக்குகளும், ஓடும் தண்ணீரும் உண்டாம். டென்மார்க் நாட்டுச் சிறந்த பசு ஒன்று 1914-ம் ஆண்டில் 1703 காலன் பால் அல்லது 769 பவுண்டு வெண்ணெய் கொடுத்ததாம். டென்மார்க்கில் எல்லோரும் படித்தவர்கள். ஆயிரத்திற்கு இருவர் தாம் படியாதவர்களாயிருக்கலாம்.

***

டென்மார்க்கில் விளையும் தானியங்களை விற்பதில்லையாம். மக்களுக்குப் போக மிஞ்சியதை மாடுகளுக்கும், பன்றிகளுக்கும் போடுகிறார்கள். அதனால் தான் மாடுகள் செழித்து ஏராளமான பாலைப் பொழிகின்றனவாம். டென் மார்க்கில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோயிலும், ஒரு ஐக்கியப் பால் பண்ணைக் கட்டடமும், ஒரு பள்ளிக்கூடமும், உபதேசியார் அல்லது குருக்கள் வீடும், சரக்குகளை விநியோகஞ் செய்யும் ஐக்கிய விநியோக சங்கக் கட்டடமும் ஆக ஐந்து முக்கிய கட்டடங்கள் உண்டாம். டென் மார்க்கின் முன்னேற்றத்திற்கு அங்கே சென்ற நூற்றாண்டில் வாழ்ந்திருந்த கிரேந்திரிக் என்ற பெரிய சமய வாதியே காரணமாம். அவர் நாமம் வாழ்க!

"லோகோபகாரி"

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

### தேசீய பாக்கள் போட்டி.

[illegible]ராக தாளங்களுடன் அமைய அறுசீர்கழி நெடிலடி விருத்தமாகப் பத்து தேசீயபாக்கள் 1926-ஞ் செப்டம்பர் மீ 30 உக்குள் கிடைக்கும்படி எழுதியனுப்புவதில் முதல்தரமான பாக்கள் எழுதியனுப்பும் முதல் மூவருக்கு சென்னை ஜில்லா காங்கிரஸ் தேசீயக் கொண்டாட்ட கழகத்தாரின் தீர்ப்புப்படி முறையே நான்கு, மூன்று இரண்டு சவரன் எடையுள்ள பொற் பதக்கங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் பரிசாகக் கொடுக்க இசைந்துள்ளார்கள். போட்டியில் கலந்து கொள்பவர்கள் தெளிவாகவும், விளக்கமாகவும் தங்கள் பாக்களை எழுதி தங்கள் பெயருக்குப் பதிலாக மாற்றுப்பெயர் குறித்து அனுப்ப வேண்டும். தனிப்பட்ட கடிதத்தில் தங்கள் முழுப்பெயரையும், விலாசத்தையும் தெரிவிப்பதோடு, தாங்களே அப்பாக்களை எழுதியதாக உறுதி மொழியும் கொடுத்து கீழ்கண்ட விலாசத்திற்கு செப்டம்பர் மீ 30 உக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

மானேஜர்

தமிழ்நாடு காங்கிரஸ்சபை

மௌண்ட்ரோடு,

சென்னை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## பலதிரட்டு.

### வாபஸ்.

கல்கத்தாவிற்குள் பண்டிதமாளவியாவும், டாக்டர் மூஞ்சேயும் வரக்கூடாதென 144 செக்ஷன்படி தடையுத்தரவை போட்ட உடன் அவர்கள் மீறியதும் வங்காளக்கவர்ன்மெண்டின் நிர்ப்தாவக்கிலும், பப்ளிக்பிராஸிகியூடருமானவர் அவர்கள் மீது பிரஸிடென்ஸீ மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருந்தார். ஆனால் 19—8—26ல் ஷை வழக்கை கவர்ன்மெண்டார் வாபஸ்வாங்கிக் கொண்டார்கள். அதற்கு காரணம் பின்வருமாறு சொல்லுகிறார்கள். மாளவியா கல்கத்தாவிற்குள் வந்தால், கலகம் ஏற்படுமென்று எண்ணினோம். ஆனால் அவர் வந்ததினாலும், அவர் பிரஸங்கம் செய்ததினாலும் யாதொரு கலவரமும் ஏற்படவில்லை. ஒருக்கால் கலவரம் உண்டாகுமென்று நினைத்துதான் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆகவே கலவரமும் வரவில்லை; வழக்கும் வாபஸ்வாங்கிக் கொள்ளப்பட்டது.

### தீவாந்திரசிக்ஷை.

கல்கத்தாவில் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டகாலத்தில் கைது செய்யப்பட்ட 16 வயதுள்ள யூஸப்பேக் என்னும் பையனுக்கு ஜஸ்டிஸ் கிரேஹம் 19—8—26-ல் தீவாந்திர சிக்ஷை விதித்தார். இந்தப்பையன் இப்படி கொடுந்தன்பஞ்செய்திருந்தாலும், நகரின் நிலைமையையும், இனி இவ்விதம் நடவாமலிருப்பதையும் உத்தேசித்து இக்கொடிய தண்டனையை ஜூரிகளின் அபிப்பிராயத்தை அனுசரித்து விதித்ததாக ஜட்ஜி சொல்லுகிறார்.

### பெரிய விபத்து.

16—8—26 மாலை டாடா தொழிற்சாலையில் ஒரு பெரிய விபத்து நடந்துவிட்டது அதாவது:-50டன் இரும்பை உருக்கி வார்த்துக் கொண்டிருக்கும் போது, பிடிப்பு நழுவி கீழே யிருந்தவர்கள் மேல் கொட்டி விட்டது. அதனால் 13 பேர்கள் உயிர் துறந்தனர். 12 பேர்களுக்கு பலத்த காயம். இது வரையும் இத்தொழிற்சாலையில் இவ்விபத்து ஏற்பட்டதில்லையாம்.

### முக்கொலை.

ஹைதராபாத்தில் பில் வகுப்பைச் சேர்ந்த ஒருவன் 20—8—26 ல் தமது மனைவி, பிள்ளை, பெண் மூவரையும் பட்டப் பகலில் கொலை செய்துவிட்டு நேரே போலீஸாரிடம் போய் சரணம் புகுந்துவிட்டான். மனைவியும், பெண்ணும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார். பிள்ளை மட்டும் ஸ்தலத்திலே இறந்துவிட்டாள். கொலைக்குக் காரணம் மனைவி மேல் சந்தேகந்தான். ஆனால் மனைவி மரண வாக்குமூலத்தில் தான் ஒழுங்காக நடந்து வருவதாகச் சொல்லுகிறாள்.

### தண்டப் போலீஸ்.

பஞ்சாப் மாகாணத்தில் ராவல்பிண்டி நகர ஜனங்களுடைய நடத்தைக் காரணமாகப் போலீஸாரின் தொகையை அதிகப்படுத்தும்படி நேர்ந்திருப்பதாகவும், சமீபத்தில் கலவர நிலைமையும் ஏற்பட்டிருப்பதாகவும், ஆகையால் இரண்டு வருடகாலத்திற்குத் தண்டப் போலீஸ் அமுலில் இருந்து வருமென்று சபையோடு கூடிய கவர்னர் விளம்பரப்படுத்துகிறார்.

### கைது செய்யப்பட்டார்.

வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் உதவிகாரியதரிசிமௌலவி சையது ஜலாலுதீன் 20—8—26-ல் கைது செய்யப்பட்டு, தினஜ்பூருக்கு அனுப்பப்பட்டார். எதிரி ராஜத் துவேஷப் பிரசங்கம் செய்ததாக தினஜ்பூர் ஜில்லா மாஜிஸ்டிரேட் பிறப்பித்த வாரண்டின் மேல் கைதியாகப்பட்டார்.

### வேலை நிறுத்தம்.

பெங்களூரில் மைசூர் பருத்தி நூல் நூற்கும் ராஜா மில்லில் 11—8—26 லிருந்து 600 பேர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள். வேலை நிறுத்தத்திற்குக் காரணம் தொழிலாளர்கள் அதிகச் சம்பளம் கேட்பதே. வேலை நிறுத்தம் நீடிக்குமபோல் தெரிகிறது. முதலாளிகளும் பிடிவாதங் காட்டுகிறார்கள். தொழிலாளர்களும், தங்கள் கோரிக்கைக் கிணங்க எதாவது நிபந்தனையின்றித் திரும்ப மறுக்கிறார்கள்.

## ஏசுகிறிஸ்து நீதிவாக்கியம்.

(தேவிதாஸன் எழுதுகிறார்.)

### தர்மஞ்செய்தல்.

உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன்வாங்க வருகிறவனிடத்தில் முகங்கோணாதே. மனுஷர் உங்களுக்கு எப்படிச்செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத்தங்களுக்கே கொடுக்கும்படியாகப், பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; நன்மை செய்யுங்கள். கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உன்னதமானவர்களுக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள். அவர் நன்றியறியாதவருக்கும் துரோகிகளுக்கும் நன்மையே செய்வார்.

உங்களுக்கு உள்ளவைகளை விற்றுவது பிச்சைகொடுங்கள். பழமையாய்ப் போகாத பண்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்கு சம்பாதித்து வையுங்கள். அங்கே திருடன் வரமாட்டான்; பணப்பைகளை பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

மனுஷர் மெய்க்க அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அப்படிச் செய்தால்பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.

ஆகையால் நீங்கள் தர்மம் செய்யும் போது, மனுஷரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் டம்பமாய்ச் செய்வதுபோல் உனக்கு முன்பாகத்தாரை ஊதுவியாதே. அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மம் செய்யும் போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன் வலதுகை செய்கிறதை இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது இருதயத்திலிருக்கிற உன்பிதாவுனக்கு தானே வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

### தீ விபத்து.

பம்பாய் துறை முகத்தில் 16—8—26 ல் "கஸாண" என்ற கப்பலில் தீப் பற்றிக் கொண்டது. இன்று இக்கப்பல் கல்கத்தாவிற்கு புறப்படத் தயாராக விருந்தது. நெருப்பணைக்கும் இஞ்ஜினால் தீ அணைக்கப்பெற்றது. சுமார் ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மேல் நஷ்டமென்று மதிப்பிடப்படுகிறது.

### பிடிபட்டார்.

வங்காளத்தில் ஷேக்நாக்குர் என்ற பெயர் போன கொள்ளைக் கூட்டத் தலைவன் 12—8—26-ல் இரவு வீல்டாவில் பலியகட்டா ஸ்டேஷனில் கைது செயயப்பட்டார். ஒரு இடத்திற்கு கொள்ளை யிடுவதற்காக சில கொள்ளைக்காரர்களுடன் ரயில் பிரயாணஞ் செய்து கொண்டிருப்பதாக போலீஸாருக்குத் தகவல் கிடைத்ததும், சாதாரண உடையில் போலீஸார்கள் வண்டியில் ஏறி அதே அறையில் உட்கார்ந்து கொண்டு பிரயாணமானார்கள். கொள்ளைத் தலைவன் போலீஸார் மீது சந்தேகப்பட்டு திடீரென்று வண்டியின் ஜன்னல் வழியாகக் குதித்து ஓடினான். போலீஸாரும் தொடர்ந்தார்கள். இரு தரப்பிலும் சிறிதுநேரம் பலத்த சண்டை நடந்தது. கடைசியில் கொள்ளைத் தலைவன் பிடிபட்டான். அவனிடத்தில் ஐந்து அறைகளுள்ள துப்பாக்கி ஒன்றிருந்தது.

## தேர்தல்பிரசாரம்.

### நாடார் பெருமக்கள் விழித்துக்கொள்வார்களா?

1—8—26-ல் ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணிக்கு சென்னைமாகாண அபிவிருத்தி இலகாமந்திரி ஸர். ஸ்ரீமான் டீ. என். சிவஞானம்பிள்ளையவர்களும், அவர்களது சகாக்களும் ஆறுமுகனேரிக்கு விஜயம் செய்தார்கள். ஸ்ரீமான் பிள்ளையவர்கள் வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் ஓர் அபேட்சகராக நிற்பதால் பிரஸ்தாப தேர்தல் பிரசாரம் ஜஸ்டிஸ்கட்சியினுடையதாகவே காணப்பட்டது. எப்படியெனில் ஆறுமுகனேரிநகரமானது சுமார் 3000 தலைக்கட்டுகள் உள்ள நாடார் பெருமக்களும் சுமார் 200 தலைக்கட்டுகள் உள்ள இதரவகுப்பினரும் அடங்கிய ஓர்ஸ்தலம். ஆறுமுகனேரியில் மகமதியர்கிடையாது.

ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்கு ஆறுமுகனேரிநகரவாசிகளின் சார்பாக வரவேற்புவைபவம்நடந்து உபசாரப்பத்திரமும்வாசிக்கப்பெற்றது. ஆறுமுகனேரிக்கும் காயல்பட்டணத்திற்கும் சுமார் 3 மைல் தூரம். காயல்பட்டணம் பூராவும் மகமதியர் அடங்கியநகரம். காயல்பட்டணம் யூனியன் போர்டு சார்பாக ஷை போர்டு தலைவரும் சில மெம்பர்களும் உபசாரவைபவத்திற்கு வந்திருந்தார்கள்.

ஆறுமுகனேரி நகரவாசிகள் சார்பாக உபசாரப்பத்திரம் வாசித்தளிக்க அதிகாரம் கொடுத்தது யார்? 3000 நாடார் தலைக்கட்டுகள் உள்ள நகரில் ஒரு பிரபல நாடாராவது நகரவாசிகள் சார்பாக விஜயம் செய்ததுண்டா? நாடார்களில் புகழ்படைத்த பல பெரியோர் உள்ள இந்நகரில் எவரேனும் விஜயம் செய்யாதகாரணம்யாது? இவ்விஷயத்தை ஆறுமுகனேரி நகரவாசிகளாகிய நாடார் பெருமக்கள் கண்டுகொண்டனர். மகமதியர்களுக்கும் மகமதியரல்லாதார் தொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்கும் ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்கும் யாதொருசம்மந்தமும்இல்லை. ஆனால் அபிவிருத்தி இலாகாமந்திரி என்ற முறையில் காயல்பட்டணம் யூனியன் போர்டு சார்பாகக்கண்டுகொள்ள ஷை போர்டு தலைவரும் (மகமதியர்) மெம்பர் சிலரும் விஜயம் செய்தார்கள் என்பது நடவடிக்கையிலிருந்து தெரியவந்தது. சிறந்த மகமதியர் ஒருவரேனும் இல்லாத ஆறுமுகனேரியில் ஷை ஆறுமுகனேரிநகரவாசிகள் சார்பாக வாசித்துக்கொடுத்த பத்திரத்தில் காயல்பட்டணத்தையும் மகமதியரையும் இழுத்துக் கொள்வானேன்! இதுவும் சூழ்ச்சியே!

சிறந்த இனி நடவடிக்கையை கவனிப்போம். உபசாரப்பத்திரம் வாசித்தளித்தபின் ஆறுமுகனேரிநகரவாசிகள் சார்பாக வரவேற்பு வைபவம் என்று பிரஸ்தாபித்துக் கொண்ட அக்கூட்டத்தில் நாயுடு வகுப்பினர் ஒருவர் எழுந்து ஒவ்வொரு சமுகத்தாரும் தங்கள் சமுகத்தவரை முன்னேற்றுவிக்க அரும்பாடு படுகின்றார்கள். ஆகையால் பிள்ளைமார்கள் மானபிமானங்கொண்டு வரப்போகும் தேர்தலில் ஸ்ரீமான் சிவஞானம்பிள்ளையவர்களுக்காக உழைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இஃது பிராமணர் பிராமணரல்லாதார் என்ற வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையில் பிள்ளைமார், நாயுடு, நாடார் என்ற உட்பிரிவினையைக் காட்டுகின்றது. மற்றும் இருபிள்ளைமார்கள் மிகவும் சாமர்த்தியமாய் சரித்தந்திரக்கதை படித்தார்கள். இதையும் யாவரும் நன்கு அறிந்து தெளிந்து கொண்டார்கள். காயல்பட்டணம் போலீஸ் ஸ்டேஷன்வட்டகைக்குள்224ஓட்டுகள் இருக்கின்றன. அதில்சுமார் 200 ஓட்டுகள் நாடார் பெருமக்களுடையதே. அநேகஓட்டுகள் விடுபட்டுமிருக்கிறது. பிள்ளைமார்கள் மானபிமானங்கொண்டு முனைந்து முன்னின்றால் நாடார்களும் தங்களாலியன்ற சர்வபிரயத்தனங்களும் செய்வார்கள்.

ஆறுமுகனேரி நாடார் பெருமக்களும் மிக்க விழிப்புடனிருக்க வேண்டியது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் தலைவர்களும் இச்சமயத்தில் தளராஊக்கங்கொண்டுமுன்னின்றுஉழைக்க வேண்டும். திருநெல்வேலி ஜில்லாவின் ஜஸ்டிஸ்கோட்டை உடைபடவேண்டும், காங்கிரஸ் மணம் எங்கும் கமழ்தல்வேண்டும் என்று நாடார் ராஜீயவாதி ஒருவர் எழுதுகிறார்.

## தூரதிருஷ்டி.

இங்கிலாந்தில் தற்பொழுது 1592000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் சென்ற வருஷத்தில் 1583000 ஏக்கர் நிலத்தில் விளைவிக்கப்பட்டது. ஆகவே இவ்வருடம் 9000 ஏக்கர் அதிகமான விளைவிற்குச் சீர்திருத்தப்பட்டிருக்கிறது.

* *

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ஆசியாக்கார ஸ்திரீகள் பிரசவகாலப் படிக்காக 5 பவுன் பெறுவதற்கு உருகதையுள்ளவர்கள் என்ற மசோதாவை பார்லிமெண்டின் இரு சபைகளும் ஒப்புக் கொண்டுவிட்டன.

* *

ஹங்கேரியாவில் கேஸ்பெல் என்ற இடத்தில் வெடிமருந்து வைக்கும் மூன்று இடங்களில் திடீரென தீப் பற்றிக்கொண்டது. மருந்துத்தொழிற்சாலை, போலீஸ் ஸ்டேஷன், கவர்ண்மெண்டாபீஸ், ஆஸ்பத்திரி முதலிய பல கட்டடங்கள் சேதப்பட்டன. உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கிறது.

* *

ஜெர்மனியில் பவேரியா என்ற பிரதேசத்தில் லாங்கன்பாக் என்ற விடத்திற்கு பர்லினிலிருந்து வந்து கொண்டிருந்த ரயில் 12—8—26-ல் தண்டுவாளத்தைவிட்டு அகன்றதினால் 3 வண்டிகள் படைசாய்ந்தன. 12-பேர்கள் இறந்தனர். 30-பேர் காயமடைந்தனர்.

* *

நிமிஷத்திற்கு 4 மைல் பறக்கக் கூடிய ஒரு ஆகாயவிமானம் கட்டப்பட்டு லண்டனுக்கு அருகில் சோதிக்கப்படுகிறதாம்.

* *

இங்கிலாந்தில் 12—8—26-ல் பெரிய புயல்காற்று அடித்ததின் பயனாக சொத்துக்களுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. மரங்கள் பல வேரோடு சாய்ந்தன. பயிர்கள் பல இடங்களில் பாழாயின. ஆனால் உயிர் சேதங்கள் இல்லை. துறைமுகங்களிலும் கொந்தளிப்பு அதிகம்.

* *

3 லக்ஷம் பெறுமதியான காகிதங்கள் கள்ளத்தனமாக அச்சிடப்பட்டு குறைந்த விலைக்கு விற்கப்பட்டுவருகின்றனவென்று இங்கிலாந்தில் ரகஸிய போலீஸார் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

* *

ஸர்ஹோகர்டேஸ் பெயர் என்ற காகிதத்தொழில்சாலைத் தலைவர் லண்டனில் ஒரு ஹோட்டலில் இறந்து கிடந்தார். அவருடைய சரீரம் குண்டுபட்டிருந்தது. இவருக்கு சில காலமாக இன்புளுவென்ஸாவென்ற சுரம்வந்து கொண்டேயிருந்ததாம்.

* *

மத்திய இங்கிலாந்தில் 15-8-26-ல் காலையில் பல இடங்களிலும் பூகம்ப அதிர்ச்சி உண்டாயிற்றாம். 8 வினாடி முதல் 2 நிமிஷம்வரை அதிர்ச்சியிருந்தாம். அந்த ஸ்தலத்தில் பூமி ஆடிக் கொண்டிருக்கும் போது ஜனங்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். சொற்ப சேதம் ஏற்பட்டிருக்கிறது. உயிர் சேதமில்லை. எவருக்கும் காயமில்லை. 5—8—26-ல் காலை 5 மணிக்கு இங்கிலாந்தில் ராட்டின் சேர் என்ற ஜில்லாவின் பல பாகத்திலும் பூகம்ப அதிர்ச்சி உண்டாயிற்று. கட்டடங்கள் ஆடின. ஜனங்கள் தெருவிற்கு ஓடிவந்து விட்டனர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# நாடார்குலமித்திரன்

அக்ஷய ஞூ ஆவணி மீ 14உ

## கௌன்ஸிலில்.

### நாடார் மகாஜன சங்கம்

கௌன்ஸில் நாளது மீ 7-ந் தேதி மதுரை நாடார் மகாஜன சங்கம் மேல் மாடியில் விருதுநகர் ஸ்ரீமான் மு. ச. பெ. செந்திக்குமாரு நாடாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்ற முழுவிபரங்களும் அடுத்த பத்தியில் பிரசுரித்திருக்கிறோம். கூட்டத்தில் முக்கியமான அம்சம் பதினோராவது கான்பரன்ஸ், ஏழை மாணவர்கள் சகாய நிதி லாட்டரிச் சீட்டு இவ்விரண்டுமே. முன்னது நடத்த வேண்டிய காலந்தவறி விட்டதென்றும், அடுத்த வருஷந்தான் நடத்துவதுசாத்தியமாகுமென்றும், இடையில் நடத்துவதென்றால் சட்டமும் இடங்கொடுக்கவில்லையென்றும், ஆகவே இவ்வருஷம் நடைபெறுவது தடைபட்டு விட்டதாகவும் தெரிகிறது. லாட்டரி யெனும் பெரிய வேலையை மேற்போட்டுக் கொண்டு முக்கியமானவர்களெல்லாம் அவ்வேலையில் ஈடுபட்டிருக்கும்போது கான்பரன்ஸும் நடத்திவிடுவதென்றால் மிகுந்த சிரமமாகத்தான் இருக்கக்கூடும்; ஆகையால் சமயோசிதமாய் கான்பரன்ஸைத் தள்ளி வைத்திருப்பது ஒருவகைக்கு நன்மைதான்.

லாட்டரியைக் குறித்து நாளது ஆவணி மீ 27உ திட்டமாய்ப் பிரைஸ் எடுத்துவிட வேண்டுமென்று ஒரு கமிட்டியும் நியமனமாகியிருக்கிறது. இதில் இனி எந்த விதமான மாறுதல்களும் ஏற்பட இடமில்லை. கட்டாயம் பிரைஸ் எடுத்துவிடுவார்கள். அதற்கு முன் அக்கமிட்டியார்களும், மகாஜன சங்க உத்தியோகஸ்தர்களும் தாங்கள் செய்ய வேண்டிய வேலைகள் யாவையும் அதி துரிதப்படுத்துவார்களாக. முக்கியமாய் நடக்க வேண்டிய பதினோராவது கான்பரன்ஸை நிறுத்தி விட்டு, என்ன வேலை செய்து விட்டார்களென்று பின்னடி ஜனங்கள் வெறுப்புக் கொண்டு விடாமலும், இதற்காகவா கான்பரன்ஸை நடத்தாதொதுக்கி விட்டார்களென்று ஜனங்கள் ஏமாற்றமடைந்துவிடாமலும், நமது ஜனத் தலைவர்களும், சங்க நிர்வாகிகளும் லாட்டரியை வெற்றியுடன் முடிப்பதற்கு வேண்டிய வேலைகள் செய்ய வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்துகிறோம்.

இதுவரையும் சுமார் நான்கு லக்ஷம் சீட்டுகள்வரையும் புள்ளிகளிடம் விற்பனைக்குக் கொடுக்கப்பட்டிருந்து முடிவில் பண்டுக்கு ஒரு லக்ஷமாவது சேரவில்லையென்று ஒருக்கால் சொல்ல வேண்டியதாய் வந்தால் அதனால் மிகுந்த ஏமாற்றமுண்டாகும். சங்கத்தில் பணமில்லாததினால் பல நன்மையான காரியங்கள் செய்யமுடியவில்லையென்று அக்குறையை நிவர்த்திக்கவே லாட்டரியை ஏற்படுத்தினோம். அதைப் பூர்த்தியாய் முடிப்பதற்காவது தலைவர்களின் ஒத்துழைப்பில்லாது போனால் பின்னால் வருந்தலைவர்கள் என்ன வேலை செய்யமுடியுமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. காரியதரிசியவர்களும், அவர்கள் சகாக்களும் சிறிது நாட்களாய்ச் செய்துவருகிறதேபோல் குறிப்பான இன்னுஞ் சிலர் சேர்ந்து செய்திருப்பார்களாகில் பிரைஸ் எடுக்கும் தினத்தை ஒத்திவைத்திருக்க வேண்டிய திருக்கிராது. சென்றது செல்க; இன்னும் பன்னிரண்டு நாட்கள் தானிருக்கிறது. அதற்குள்ளாவது ஒரு வாரமாயினும் நமது மாபெருந் தலைவர்கள் யாவரும் ஒன்றுகூடி சிறிதேனும் பிரயாசைப்பட்டால் பலன் தராமற்போகாது.

வெளியூர்களிலுள்ள குலாபிமானிகளனைவோரும், இதர சீட்டு விற்பனைசெய்கிறவர்களும் உடனே பணங்களை அனுப்புவார்களாக. இனி ஒத்திவைப்பார்களென்று ஒருவரும் நினைக்க வேண்டாம். சேர்ந்தவரையாவது குறித்த காலத்தில் பிரைஸ் எடுப்பார்களென்பது திண்ணம்.

## இயந்திரங்களினால் வருங் கேடுகள்.

யந்திரங்களினால் வரும் கேடுகள் அனந்தமுண்டு. ஒன்றைத் தவிர மற்றவைகளையெல்லாம் மற்றொரு சமயம் எழுதுவோம். மனிதனுக்கு உண்பதும், உடுப்பதும் அவசியம். உண்பதற்கு உழுது, விதைத்து, அறுத்து, அடித்துத் துவைத்து, திரித்து, அரைத்து, அவித்து சாப்பிட்டும், உடுப்பதற்கு விதைத்து, பறித்து, அலாத்து, நூற்று, நெய்து உடுத்தி, உண்டு, உறங்கி, புஜபல பராக்கிரமமும், தீர்க்காயுளும் படைத்த வீரர்களும், வீரவனிதைகளும் நம் நாட்டில் அனந்தங்கோடி மக்கள் வாழ்ந்து வந்தார்களென்று கேள்விப்படுகிறோம்.

தற்போது உடுப்பதற்கு நான்கு முழ ஆடைக்கு அந்நிய நாட்டின் யந்திரத்தின் தயவையே எதிர்பார்ப்பதுடன், உடுத்திவிடுவதற்கும் ஒரு யந்திரமுண்டானால் தேவலை என்றுங்கூட சிலர் நினைக்கும்படியான நிலைமைக்கு அவர்களுடைய தேகமும், மனமும் சீர்குலைந்து நிற்கின்றன. இந்நிலைமையில் உண்பதற்குரிய தானியங்களை உடைப்பதற்கு வேண்டிய இயந்திரங்கள் நாடெங்கும் பரவி விட்டன. இவ்வியந்திரங்கள் நின்றுபோனால் உண்பதற்குக் கஷ்டம் நேரிடும் போலும். சாதாரணமாய் நெல் குத்திய பெண்கள், மாவரைத்த ஸ்திரீகள் வெகு நாள்களாய் அப்பழக்கத்தை விட்டபடியால் மீண்டும் அதைச் செய்ய முடியவில்லையென்கிறார்கள். அற்பமான அவ்வேலை இப்போது பெரும்பளுவாய்க் காண்கிறதென்கிறார்கள். இம்மட்டாய் விட்டதா? இயந்திரங்களில் பக்குவப்படுத்தின அரிசிகளைச் சமைத்துச் சாப்பிடுவதினால் பல வியாதிகள் வருமென்று பல வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள் தற்போது கல்கத்தாவில் பெரி பெரி என்னும் பெரிய வியாதி கண்டு வருவதாகக் கல்கத்தா முனிஸிபாலிட்டிக் கெஸட்டில் சில விபரங்கள் காணப்படுகின்றனவாம். சென்னையிலும் சிலர் அவ்வியாதியால் கஷ்டப்படுவதாக ஒரு வைத்தியர் கூறுகிறாராம்.

அரிசியானது யந்திரத்தில் தவிடேயில்லாமல் அரைத்துவிடப்படுவதினாலும், இயந்திர உஷ்ணத்தினால் அரிசியின் ஜீவசத்துக் குறைந்து போவதினாலும், புழுங்கமுண்டாகி ஓர் விதகெட்ட வாடையுண்டாவதினாலும் வியாதி பரவ ஹேதுவுண்டாகிறதாம். பெரி பெரி வியாதியின். அடையாளமாவது:— காலில் ஆடு சதையில் தொட்டால் வலியும், பாதத்தில் சுரப்பும், இருதயத் திடிப்பும், மூச்சு வேகமாய்ப் போவதும் உண்டாம். இவ்வியாதி வரவொட்டாமல் தடுக்க வேண்டி அரிசைச்சாப்பிடுவதையே நிறுத்திவிட்டு, சத்துள்ள ஆகாரம், பழம், புதுக் காய்கறி, நல்லநெய் முதலியவற்றைஉபயோகப்படுத்துவதுடன் உடம்புக்குக் கொஞ்சம் ஓய்வும் கொடுக்க வேண்டும் என்று கல்கத்தா கெஸட்டில் பிரசுரமாகியிருக்கிறதாகத் தெரிகிறது. அதனால் கலமுண்டென்றும் நம்பஇடமிருக்கிறதாம். ஆகையால் யந்திர அரிசியைச் சாப்பிடும் நண்பர்கள் கவனித்துக்கொள்வார்களாக. லாபத்துக்கு யந்திரம் வைத்திருப்பவர்களும் ஜனோபகாரமான தருமத்துக்கு வேண்டிய முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டியதென்று நாம் சொல்லத் தேவை இல்லை. இப்படி உண்பதற்கும், உடுப்பதற்கும் யந்திரச் சேர்க்கையை நாடி நமக்கு இயற்கையான எல்லாப் பலங்களையும் இழந்து போவதுடன் முடிவில் உயிருக்கே ஆபத்து என்று கேட்டவுடனாவது நாம் விழித்துக் கொள்ள வேண்டாமா?

## குறிப்புகள்.

### மதுரை நகரபரிபாலனசபை.

மதுரை நாடார்மகாஜன சங்கம் மாஜிக்காரியதரிசியும், பிரபல இரும்பு வர்த்தகரும், மிகுந்த குலாபிமானியும், நமதாத்ம நண்பருமான ஸ்ரீமான் வா. அ. மு. ச. புன்னையப்ப நாடாரவர்கள், மதுரை நகரபரிபாலன சபை 14-வது தொகுதியின் ஜனப்பிரதிநிதியாக யாதொரு போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள் என்றவந்தத்திகண்டுஉள்ளம் மகிழ்கின்றோம்.

தனமும் மனமும் திறமையுமுள்ள ஒரு கனவானைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களை மிகவும் பாராட்டுகின்றோம். விலை கொடுத்துத் தலை வாங்க நினைப்பவர்களுக்கும் வாக்குரிமையின் மதிப்பறியாமல் விலைக்கு விற்பவர்களுக்கும் நமது நண்பர் தேர்தல் ஓர் நல்ல படிப்பினையாயிருக்குமென்பதில் என்ன சந்தேகம்? நான் தலைவன் என்று சாற்றிக்கொள்வதைப் பார்க்கிலும் நீ தலைவன் என்று ஏற்றுக்கொள்ளுவதே தலைமையின் லட்சணமுமாகும். இம்மேலான தத்துவத்தை நமது நண்பரின் மதுரைத் தேர்தல் நிரூபித்திருக்கிறது.

அவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கருதிய சகாக்களுக்கும் அவரைத்தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்கும் அவர் எப்போதும் இணக்கமாய் நடந்து நகரபரிபாலன சபையில் அவருடைய கடமையைச் சரியாகச் செய்து முடிப்பார். அடுத்து வரும் தேர்தல் தோறும் அவரையே அத்தொகுதிக்குத் தேர்ந்தெடுக்க வேணுமென்ற விருப்பமும் ஊக்கமும் வாக்காளர்களுக்கு உண்டாகும் வண்ணம் அவர் திறமையுடனும் பட்சமுடனும்

## மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

### புத்தர் ஞானம்.

( முருகதாஸன் எழுதுகிறார் )

இளவரசு (புத்த) ருக்கு வயது பதினெட்டாயிற்று. அவர் குளிர் காலத்தில் வசிப்பதற்கும், கோடை காலத்தில் வசிப்பதற்கும், வஸந்த காலத்தில் வசிப்பதற்கும் மூன்று மாளிகைகள் மிக்க அலங்காரமுள்ளதாய் கட்டப்பட்டன. அம்மாளிகைகளைச் சுற்றிலும் பார்ப்பதற்கினிய தோட்டங்கள் அமைந்திருந்தன. கங்கை நீரங்கு வந்து பாயும்படி சிற்றோடைகள் செப்பனிட்டிருந்தன. இளவரசர் பகற் காலத்தைக் கழிப்பதற்கேற்ற சகல விநோதங்களும் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் இளவரசர் தோட்டத்தைச் சுற்றி வரும்போது, அழகாய்ச் சிரித்துக் கொண்டிருக்கும் எரியானது ஆகாயம் மேகத்தால் மூடப்பட்டபோது மந்தமாய் விசனகரமான பார்வையடைவது போல் இளவரசர் மனதில் தான் முன் காடு பார்க்கப்போன ஞாபகம் அடிக்கடி வரவும் உடனே தனது சந்தோஷமான பார்வை மாற தியானத்தில் அமர்ந்து விட்டார்.

இதையெல்லாம் நன்றாகக் கவனித்த அரசர் மந்திரிகளை அழைத்து ஐயன்மீர், சித்தார்த்தன் (புத்தன்) பிறந்தபோது நக்ஷத்திரங்களின் நிலையைப் பார்த்து சோதிடர்கள் சொன்னதாவது:— அரசான விரும்புவானாகில், அரசர்க்கரசனாய் உலகெலாம் ஓர் குடைக் குள்ளாளுவான்; அல்லது நாடு துறந்து, வீடு துறந்து, போகந் துறந்து மிகக் கஷ்டப்பட்டு என்ன காரியத்திற்காகவோ ஞானியாவானென்று சொன்னார்கள். இப்போது அவன் நடையைப் பார்த்தால் பின் சொன்ன வழிக்குத்தான் வருவான்போற்றெரிகிறது. அப்படி நேராமற் செய்வதற்கு எப்படி யோசனை யென்று கேட்டான்.

அதற்கவர்கள் காதலானது இவையெல்லாவற்றையும் மாற்றிவிடும். இதுவரை சிறு பையனாயிருந்தமையாலப்படியிருந்தான். ஒரு அழகிய

---

நடந்துகொள்ளத் தவறமாட்டார். நாடார்மகாஜனசங்கத்தின் தற்கால உத்தியோகஸ்தர்களும் அவர்களின் சகாக்களும் இது விஷயத்தில் வெகு கண்ணியமாய் நடந்திருக்கிறார்கள் என்று அறிந்து சந்தோஷிக்கின்றோம்.

### மித்திரன் புதிய போஷகர்.

பாளையங்கோட்டை பிரபல வக்கீல் டானியில் தாமஸ்நாடார் பி. ஏ. அவர்கள் நமது நாடார்குல மித்திரனுக்கு புதிய தோர் போஷகப்பிரபுவாகச் சேர்ந்து மித்திரனின் அபிவிர்த்தியை நாடி யிருக்கின்றனர். இவரின் பெருந்தகைமைக்கு நாம் பெரிதும் பாராட்டி சந்தோஷிக்கின்றோம். இதேபோல் நங்குலச் செல்வர்களனைவரும் அன்பெனும் சந்தாவையோ, ஜீவிய சந்தாவையோ, போஷகப் பணத்தையோ, நன்கொடையையோ மித்திரன்பால் செலுத்தினால் மித்திரன் என்றும் விருத்திமுகங்காட்டுவானென்பதற்கையமின்று.

### ஸ்தலஸ்தாபனம்.

நன்னிலம் ஸ்ரீமான் எஸ். முத்துச் சங்கரநாடார் அவர்கள் நகர ஹானரரி மாஜிஸ்ட்ரேட்டாக நியமனம் செய்யப்பெற்றிருக்கிறார்.

---

மதுரை நகர பரிபாலனசபைக்கு மதுரை ஸ்ரீமான் வா. அ. மு. ச. புன்னையப்பநாடார் அவர்கள் 14-வது வார்டு வாக்காளர்களால் போட்டியன்னியில் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



பெண்ணைத் தேடிக் கொடுத்தால் சுவர்க்கத்தையும் மறக்கடிக்கும். இரும்புச் சங்கிலிகளால் கட்டப்படாத மனதை பெண்ணின் சிறு கூந்தல் கட்டும் என்று சொன்னார்கள்.

அதுவே சரி யென்று இளவரசன் மனதுக் கிசைந்த பெண்ணைப் பார்த்துக் கொடுத்தால் மிக நல்லதென்று இளவரசன் பிறந்த நாள் கொண்டாட்ட தினத்தில் பெண்களுக்கெல்லாம் இனாம் கொடுப்பதாக முரசறைவிக்க ஏற்பாடு செய்தான். அத்தினம் அரண்மனை வெகு விநோதமாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. தேசத்துப் பெண்கள் யாவரும் இளவரசன் கையால் இனாம் வாங்கப்போகிறோமென்று ஆடை யாபரணலங்கிர்தர்களாய் அரண்மனையில் வந்து கூடினார்கள். அந்நகரத்துப் பிரபுக்களெல்லாம் இவ்வேடிக்கைப் பார்க்க வந்து சேர்ந்தார்கள். நெஞ்செறிவு கொண்ட வஞ்சகமுழுமக்களுக்கு இக்கண் காக்ஷியைக் காணமுடியாமற் போய்விட்டது ஜன நெருக்கத்தில் இருக்க இடமின்றி கூமூஞ்சுடன் வெளியே நின்றனர் இனாம் கொடுக்க வாரம்பிக்கவும் பெண்களெல்லோரும் ஒவ்வொருவராக தத்தம் வடிவுக்கேற்ற பரிசுகளைப் பெற்றுக் கொண்டு போனார்கள். அப்படி வாங்கின ஒரு பெண்ணையாவது இளவரசன் நிமிர்ந்து பார்க்கவில்லை. அவனது அழகிய மேனியும், கம்பீரமான தோற்றமும், சாந்தமான பார்வையும், தெய்வத்தன்மையதாயத் தோன்றினவே யன்றி சிறிதும் ஆசை வைக்கத் தோன்றவில்லை. இப்படி ஒவ்வொருவரும் தலையைக் குனிந்து கொண்டே பரிசு பெற்றுப் போக பரிசுகளெல்லாம் செலவழிந்து போயின. அப்பொழுது இரை கடலமுதே யுருக்கொண்டெழுந்தது போலினிய பார்வையும், மலை மகள் கருணையும், சமலையினெழிலும் விளங்கிப் பிரகாசிக்கும் வதனத்தையும், நறவுமிழ் தாமரை பொலிவிழந்திருப்ப இவ்வாண்மனை புகுந்த செல்வியோ வெனக் கண்டோர் மயங்கும் அழகையும் உடையவளான யசோதை என்பவள் அங்கு வந்தாள். அவள் மற்றவர்களைப்போல் தலை குனிந்து நில்லாமல் நிமிர்ந்து நின்று இளவரசனை நோக்கி, இனிதாய் முறுவலித்து "என் ஐய" எனக்குப் பரிசொன்றுமில்லையோ என்று கேட்க, இளவரசன் இந்நகர்க்கு ஓர் அணிகலமாய் விளங்கும் என் இனிய சகோதரி! எல்லாம் ஆய்விட்டது. ஆயினும் எனக்காக இதை வைத்துக்கொள் என்று தன் மார்பிலணிந்திருந்த ஓர் முத்து ஆரத்தை யெடுத்து அவள் கழுத்திலிட்டான். அப்பொழுது அவர்கள் காதல் விளங்கிற்று.

இதை யெல்லாம் பார்த்திருந்த அரசனும், அமைச்சரும் சோதையின் தந்தையான சுப்ரபுத்தன் என்பவன் சம்மதத்தைக் கேட்டார்கள். அவனும் பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்தான். ஆயினும் அக்காலத்தில் அரசர் பிரபுக்களுக்குள் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறவர்களில் எவன் மற்றவர்களை விட விற்போர், வாட்போர், குதிரைச் சவாரி முதலிய க்ஷத்திரிய விருத்திகளிற் சாமர்த்தியவானுக்கே பெண்ணைக் கொடுப்பதென்ற வழக்கமாயிருந்தது. சுப்ரபுத்தன் அவ்வழக்கத்திலிருந்து தவறேன் என்று சொல்லவே அரசனுக்குத்தான் மகன்; மற்றவர்களை ஜயிப்பானோ வென்ற சந்தேகம் பிறந்தது. ஆனால் இளவரசன் சிறிதும் அஞ்சாமல தன் திறத்தை மற்றவர்களுடன் போட்டி போட்டுக் காண்பிப்பதாக ஒப்புக் கொண்டான். அப்படியே தன் காதலியை விரும்பி வர்தவர்களை யெல்லாம் ஜெயித்து தன் உரிமையை ஸ்தாபித்தான். அவ்விரு காதலர்க்கும் வேத விதிப்படி மிகுந்த கோலாகலத்துடன் விவாஹம் நடந்தது. இவ்விதமாக இளவரசன் இவ்வுலகத்திற்குக் கட்டுப்பட்டவனானான்.

---

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### கௌன்ஸில் மீட்டிங்கு.

1926-வருஷம் ஆகஸ்டு மீ௳ 23 உ திங்கட்கிழமை மாலை 7-மணிக்கு சங்கம் ஆபீஸில் நடைபெற்ற கௌன்ஸில் மீட்டிங்கின் நடவடிக்கைகள்.

1. விருதுநகர் ஸ்ரீமான் மு. ச. பெ. செந்திக்குமாருநாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

2. அடியிற்கண்ட மெம்பர்கள் ஆஜராயிருந்தனர். ஸ்ரீமான்களான விருதுநகர் மு. ச. பெ. செந்திக்குமாருநாடார், பெ. சி. சிதம்பரநாடார் மதுரை பா. ம. பாண்டிய நாடார், ஆ. அ. ஆறுமுகநாடார், பெ. அ. பெரியசாமிநாடார், ப. வ. சோமசுந்தரநாடார், வா. அ. புன்னையப்பநாடார், மா. வேலுநாடார், ப. ரா. முத்துச்சாமி நாடார், ஆ. பச்சய நாடார், மு. சுடலைமுத்து நாடார், கொ சி. தெ. குருசாமிநாடார், அ. சு. சொ. சு. சங்கரபாண்டியநாடார், வ. அ. மை நாடார், சமையநல்லூர் மு. வடிவேல் நாடார், திருச்சுளி, கே. முத்து நாடார் (3) 1926-வருஷம் ஜூன் மீ௳ 30 உ யோடு முடிந்த மூன்று மாதத்திய வேலைகளையும். வரவு செலவுகளையும் குறித்து காரியதரிசிகளால் சமர்ப்பிக்கப் பெற்ற ரிப்போர்ட்டு வாசிக்கப் பெற்று அங்கீகாரம் செய்யப் பெற்றது.

4. 12—9—26-ல் அடியிற்கண்ட கனவான்களின் தலைமையின்கீழ் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப்லாட்டரி எடுப்பதென ஏகமனதுடன் தீர்மானிக்கப் பெற்றது.

ஸ்ரீமான்களானபி. கே. எஸ். ஏ. ஆறுமுகநாடார் ஏ. சிதம்பர நாடார்—சிவகாசி, W. P. A. சௌந்தர பாண்டியநாடார், பட்டிவீரன் பட்டியம். முத்துவைகுந்தநாடார் நட்டாத்தி, அரி. அ. செ. கந்தசாமி நாடார் அரி. அ. க. துரைச்சாமிநாடார்—தூத்துக்குடி, ராஜாடானியேல்நாடார்—நாகர்கோவில், கு. மாரியப்பநாடார்-எட்டையாபுரம், பு. வீ. ஆதிமுத்துமாலைநாடார்—உசிலம்பட்டி, மு. ச. பெ. செந்திக்குமாருநாடார்-விருதுநகர், அ. செந்தி விநாயகநாடார்-திருமலாபுரம், பூ. பெ. பெ. சிதம்பர நாடார்—திருமங்கலம், ஸ்ரீமான் கே. பாலசுப்பிரமணிய நாடார்—திருமங்கலம், எஸ். ஏ. முத்து நாடார், ப. உ. ஆ. சிதம்பர நாடார—அருப்புக்கோட்டை, அ. சு. சொ. சு. சங்கபாண்டிய நாடார்-விருதுநகர், ஏ. யல். யம். கருப்பணசாமி நாடார்—கும்பகோணம், எஸ். பி, ஸ்ரீனிவாசநாடார்—சென்னை, மா. நீ. பொன்னையா நாடார் வீ. பி. இரத்தினசாமி நாடார், ம. ப. ப. பண்டார நாடார், அ. பெ. அல்விமுத்துநாடார் மா. வே. பழனிச்சாமிநாடார், மா. ச. மா. பொன்னுச்சாமிநாடார், ப. வ. சோமசுந்தரநாடார், ந. சு. வி. சுப்பய்யாநாடார் சி. வ. வாலசுப்பிரமணிய நாடார் வா. அ. புன்னையப்பநாடார், ஏ. பொன்னையாநாடார், வி, எஸ். ஜபிராம்நாடார்-மதுரை, ஆ. வெ. பழனியப்ப நாடார்சிவகெங்கை, கே. முத்துக்குமாரசாமிநாடார் மா. வேல்நாடார்-மதுரை

மேற்கண்ட மெம்பர்களுடன் காரியதரிசிகள் உசிதம்போல் மேல்கொண்டு மெமபர்களை சேர்த்துக் கொள்ள அதிகாரம் கொடுக்கப் பெற்றது.

5. இராஜபாளையம் நாடார்களுக்குள்ளிருக்கும் ஒற்றுமைக் குறைவை நீக்கும்பொருட்டுபலதடவைகளில்கமிட்டிகள் நியமிக்கப்பெற்றும், சரியான முடிவுக்கு வாராததால் அதனை காரியதரிசிகள்யுக்தம் போல்ஒழுங்குசெய்து வைக்கும்படி அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

6. 8-வது கான்பரன்ஸ் உபசரணைக்கமிட்டியாரிட மிருந்து வந்த ரிப்போர்ட்டு புஸ்தகம்வாசிக்கப்பெற்று ரிக்கார்டுசெய்யப் பெற்றது. ஷையார் களிடமிருந்து வர வேண்டிய அண்டாவை காரியதரிசிகள் எழுதி வரப் பற்றிக்கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

7. 11-வது கான்பரன்ஸ் குறித்த காலத்தில் நடைபெறுதற்கு காரணம் லாட்டரிசீட்டு விஷயமாய் தீவிரமாய் வேலை நடத்திக் கொண்டுவந்ததாலும், காரியதரிசிகளில்ஒருவர் ராஜிநாமாச் செய்து விட்டபடியாலும், மே, ஜூன் மாசங்களில் நடத்துவதற்கு ஏதுகரமில்லாமலிருந்த விஷயத்தை காரியதரிசிகளால் சமாதானம் சொல்லப் பெற்று, கௌன்ஸிலால் அங்கீகாரம் செய்யப்பெற்றது. ஜெனரல் மீட்டிங், சங்கத்தின் சட்டதிட்டங்களின்படி மே, ஜூன் மாதங்களில் நடத்தவேண்டியதிருப்பதால் 1927 வருஷம் மே, ஜூன் மாசங்களில் நடக்கும் ஜெனரல் மீட்டிங்கு காட்சியை அனுசரித்து 11-வது கான்பரன்ஸ் நடத்துவதென்று தீர்மானிக்கலாயிற்று.

மு. ச. பெ. செந்திக்குமாருநாடார்
பிரசைடிங் சேர்மன்.

---

## வாரக் கொண்டாட்டம்.

### நாடார் மஹாஜன வாரம்.

ஆவணி மீ௳ 7உ (23-8-26) நாடார் மஹாஜன வாரம் மிகவும் சிறப்புடன் கொண்டாடப்பெற்றது.

அன்று காலையில் ஜாதீய கொடிகளையும், ஸ்காலர்ஷிப் லாட்டரிச் சீட்டின் விளம்பர போர்டுகளையும் தாங்கிய மாணவர்கள் அணிவகுத்துச் சென்ற காக்ஷியும், ஸ்ரீமான் வே. அ. சிதம்பரநாடார் அவர்கள் தலைமையின் கீழ் பல அன்பர்கள் ஜாதியகீதம்பாடிச் சென்ற நேர்மையும் ஜனங்கள் மனதை வசீகரிக்கத் தக்கதாயிருந்தன.

பிரபல வீதிகளில் பஜனை கோஷ்டிகள்வந்துகொண்டிருக்கும் பொழுது சிறந்தமரியாதைகள் செய்யப்பெற்றன.

அன்று இவ் வைபவத்தில் கலந்துழைத்த அபிமானிகளுக்கு நமது அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

காரியதரிசிகள்.
நாடார் மகாஜன சங்கம், மதுரை.

---

## சென்னை சட்டசபை.

(உதகமண்டலத்திலிருந்து ஒருநண்பர்எழுதுகிறார்.)

திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் கிறிஸ்தவ பகுதிக்கு நடைபெறப்போகும் கவுன்சில் எலக்ஷனுக்கு தஞ்சாவூர் மிஸ்டர் பன்னீர் செல்வம் உடையார் அவர்கள் ஓர் அபேக்ஷகராக நிற்பதை கேள்விப்பட்டோம. மிஸ்டர் பன்னீர் செல்வம் எவ்விஷயத்தில் மேற்படி பதவிக்கு அருகரான போதிலும், இவர் நிற்பது நமது திருநெல்வேலி, ராமநாதபுரம் இந்திய கிறிஸ்தவ மேதாவிகளுக்கு ஓர் இழப்பம் அன்றோ! மேற்படியாருக்கு ஓட் கொடுத்தால் நமது ஜில்லாக்களில் கவுன்சிலர் பதவிக்கு அருகரானவர்கள் இல்லையென்று ஒப்புக் கொள்வது போலன்றோவாகும். ஆனால் தற்சமயம் அப்பதவிக்கு அபேக்ஷகராக நிற்க முன் வந்திருக்கும், திருநெல்வேலிக்காரரான மிஸ்டர் டானியேல்தாமஸ் நாடார், பி. ஏ. வக்கீல் எவ்விஷயத்திலும் தகுதியுள்ளவரும், சாதுரியமான வாக்கு வல்லமையுள்ளவரும், எவராலும் நன்கு மதிக்கப்பட்டவருமாயிருக்க திருநெல்வேலி, ராமநாதபுரம் கிறிஸ்தவர்கள் அன்னவருக்கே தங்கள் ஓட்டுகளைக் கொடுத்து தங்கள் சுய ஜில்லாக்காரரையே தங்களின் ஜனப் பிரதிநிதியாக அனுப்புவார்களென்று பூரணமாய் நம்புகிறோம்.

---

## மதிப்புரை.

### "ஸ்நான தர்மம்"

மருந்தில்லாமல் அநேக நோய்களைத் தீர்க்கலா மென்பதற்குப் பல சிறந்த முறைகளைத் தாங்கி காஞ்சிபுரம் ஸ்ரீமான் சி. பி. ஏ. ரங்காச்சாரியாரவர்களால் வெளியிடப்படும் இரண்டாம் ஆண்டின், 2-வது இதழ் ஒன்று வரப்பெற்றோம். பத்திராதிபர் குறிப்பில் ஆத்மார்த்தமான பல கருத்துக்களும், சாஸ்திர சம்பந்தமான பலர் அபிப்பிராயங்களும் தெளிவாக எழுதப் பட்டிருக்கின்றன. மாதச் சஞ்சிகை வருடச் சந்தா ரூ 1—8—0

---

## ஒரு ஆதித்திராவிட வாலிப நண்பரின் கடிதம்.

மகா-ள-ள-ஸ்ரீ மகாஜனமுங்கண்ணிய முந்தங்கிய நாடார்குலமித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கு அன்பும் வணக்கமுமாய் எழுதிக்கொள்வது:—

அன்புமிக்க ஐயா, நான் ஒர் ஏழை சாம்பவ (ஆதித்திராவிட) வாலிபன் வறுமையாளன் என் பதிலிருந்து எனது சகல காரியங்களையும் ஒருவாறு யூகித்துக் கொள்வீர்களானபடியால், வரையத் துணிந்ததைச் சுருக்கமாய் எழுதுகிறேன். நான் ஒன்பதாவது வகுப்புவரையும் படித்துள்ளேன் தற்சமயம் 6 ரூபாய் மாதச்சம்பளமுள்ள ஓர் அலுவலிலமர்ந்துள்ளேன். தங்களது பத்திரிகையை வாசிப்பதில் மிக்கப்பிரியமாக சுமார் ஆறுமாதகாலமாய்ச்சந்தாத்தொகை அனுப்பப்பிரயாசைப்பட்டும்கைகூடாமல் என்னுடைய வறுமையினாலும் வரும்படியின்மையினாலும் முடவன் கொம்புத்தேனுக்காவல் கொண்டதேபோல் மிக்கவருந்துகிறேன். இப்பொழுதும் என்னெண்ணத்தைத் தங்களுக்குத் தெரிவித்தால் இரங்குவீர்களென்றே இவ் விண்ணப்பம் வரையலானேன். ஆகையால் அன்புள்ள ஐயா, என்னிலைமையையும், அவலையும் நோக்கிப்பார்த்து அன்புடனிரங்கி தங்களது அருமைப் பத்திரிகையை இலவசமாக அனுப்பித்தந்தால், என்னால் சந்தா செலுத்தும் திறமைவந்தவுடன் சந்தா செலுத்திப்பெற்றுக் கொள்ளுவேன். அம்மட்டும் இரங்கி அனுக்கிரகித்தால், மிக்க நன்றியுள்ளவனாயிருப்பேன். அத்துடன் நான் நடத்திவரும் ஓர் எளியார் வாலிபர் சங்கத்திற்கென்று ஓர் வாசிப்புசாலை கட்ட உதவிபுரியும்படி பொதுஜன தனவான்களை தங்களிஷ்டப்படி உதவிசெய்ய தங்கள் பத்திரிகையின் மூலம் வெளிவதுடன், மற்றப்பத்திரிகைகளையும் எவ்வண்ணம் ஊக்கமளிக்க மிகவும் கெஞ்சி மன்றாடுகிறேன்.

கடவுள் தங்களையும் தங்கள் பத்திரிகையையும் நன்மைக்காக என்றும் பிரகாசிக்கப்பண்ணுவாராக.

தங்கள் உதவியை நாடிய பக்ஷமுள்ள ஏழையாளன்.

கிரிஸ்ட்டலாஸ்.

குறிப்பு:— இந்நண்பர் தமிழில் முத்துப்போன்ற எழுத்தில் வெகு சுத்தமாக எழுதியிருக்கிறார். அவருடைய மனோவாக்குக் காயங்களும் அவ்வாறே சுத்தமாயிருக்குமென்று நம்புகிறோம். இவர் போன்ற மற்ற ஆதித்திராவிட வாலிபர்களுக்கும் சன்மார்க்க வழியில் மிகுந்த ஆர்வமுண்டாகவேண்டுமென்றுகடவுளைப்பிரார்த்திக்கிறோம். சிதம்பரம் சகசானந்தரைப் போன்ற பல சகசானந்தர் தோன்றி நம் நாடு முக்கியமாய் தென்னாடு சீர்திருத்தம் பெறவேண்டி மீண்டும் கடவுளைப் பிரார்த்திக்கிறோம. பத்திரிகை படிப்பதில் அவருக்குள்ள ஆவலைப்பற்றி மிகவும் பாராட்டுகிறோம். அவருடைய விருப்பத்திற்கிணங்கி ஒரு வருஷத்திற்கு இலவசமாகப் பத்திரிகை அனுப்பி வருவோம். ப-ர்.

---

## இந்தியாவின் இயற்கைமணம்

### சீமையில் சிறைச்சாலை சென்றுமீண்ட வீரரின் வீரமொழி.

பார்லிமெண்டின் இந்திய அங்கத்தினரான ஸ்ரீமான்சக்லத்வாலா சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைந்த பிறகு சுரங்கத்தொழிலாளர்கள் அவருக்கு ஓர் உபசாரம் நடத்தினார்கள். அச்சமயம் சக்லத்வாலா சொன்னதாவது:—சிறைச்சாலையில்நான் சுகமாகக் காலங்கழித்தேன். ஆனால் நான் உள்நாட்டு மந்திரியாகி ஓர் அவஸரச் சட்டமும் பிறப்பிக்க நேர்ந்தால் இம்மந்திரி முட்டாள்தனமான சிறைத் தண்டனை விதித்து, ஆனந்தமாயும் சோம்பேறித்தனமாயும் காலங்கழிக்கும்படி விடமாட்டேன். எஜமானர் வகுப்பினரை 6-மாத காலத்திற்கு ஒரு சுரங்கத்தில் தள்ளி, அவர்கள் வெளியே வந்த பிறகு சந்திக்கரையில் உட்காரவைத்துக் கரியை அலம்பச்சொல்லுவேன். வாரம் 2-பவுனுக்குள் அவர்களும் மனைவி மக்களும் ஜீவிக்க வேண்டுமென்று கட்டளையிடுவேன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சென்னைமாகாண 1921 ஹிந்திய ஜனக்கணித ஆராய்ச்சி.

| | |
|---|---|
| சென்னை மாகாண மொத்த ஜனத்தொகை | 42794155 |
| ஹிந்துக்கள் | 37942191 |
| மகமதியர்கள் | 2365285 |
| கிறிஸ்தவர்கள் | 1380672 |
| ஆத்மார்த்திகர்கள் | 578398 |
| ஜெயினர்கள் | 25493 |
| புத்தமதஸ்தினர்கள் | 1222 |
| பார்ஸிகள் | 529 |
| யூதர்கள் | 45 |
| இதர மதஸ்தினர் | 320 |

சென்னை மாகாணத்தில் எல்லா மதம், வகுப்புகளிலும் கலியாண செய்யாதவர்களின் தொகை 19307770

| | |
|---|---|
| கலியாண்செய்து கொண்டவர்களின் தொகை | 18465667 |
| விதவைகள் | 4091962 |
| தாரமிழந்தவர்கள் | 928756 |

இனி மாகாண ஜனத்தொகையை வயதுவாரியாகப் பிரித்து எழுதுவோம்

| | | |
|---|---|---|
| 1. | 0—1 வயதுள்ளவர்கள் | 1111,940 |
| 2. | 1—2 | 653393 |
| 3. | 2—3 | 1,068,670 |
| 4. | 3—4 | 1,251,715 |
| 5. | 4—5 | 1,176,440 |

ஆகவே மேல்கண்டபடி 5 வயதிற்குள்பட்ட குழந்தைகளின் மொத்தத் தொகை 5 262,658

| | | |
|---|---|---|
| 6. | 5—10 வயதுள்ளவர்கள் | 5,791,577 |
| 7. | 10—15 | 5 097,138 |
| 8. | 15—20 | 3 523,316 |
| 9. | 20—25 | 3,686,692 |
| 10. | 25—30 | 3,645,319 |
| 11. | 30—35 | 3,605,051 |
| 12. | 35—40 | 2,442,564 |
| 13. | 40—45 | 2,717,504 |
| 14. | 45—50 | 1,561,268 |
| 15. | 50—55 | 20,27,220 |
| 16. | 55—60 | 852416 |
| 17. | 60—65 | 1355564 |
| 18. | 65—70 | 387776 |
| 19. | 70 வயதிற்குமேல்பட்டவர்கள் | 839162 |

### ஹிந்துக்கள்.

| | |
|---|---|
| 5 வயதிற்குள் பட்டு கலியாணஞ் செய்த ஆண்கள் | 7131 |
| பெண்கள் | 19359 |
| 5 வயதிற்குள்பட்ட விதவைகள் | 1211 |
| 5 வயதிற்குள்பட்ட தாரமிழந்தவர்கள் | 318 |
| மொத்த ஜனத்தொகை | 37942191 |
| கலியாணஞ் செய்தவர்களின் தொகை | 16489755 |
| கலியாணம் செய்த ஆண்கள் | 8001554 |
| கலியாணம்செய்த பெண்கள் | 8488201 |
| விதவைகள் | 3713695 |
| தாரமிழந்தவர்கள் | 839511 |

### மகமதியர்கள்.

| | |
|---|---|
| மொத்த ஜனத்தொகை | 2865285 |
| மொத்தம் கலியாணம் செய்தவர்கள் | 1146810 |
| கலியாணம் செய்த ஆண்கள் | 548569 |
| கலியாணம் செய்த பெண்கள் | 598241 |
| 5 வயதிற்குள் கலியாணஞ் செய்த ஆண்கள் | 245 |
| 5. வயதிற்குள் கலியாணம் செய்த பெண்கள் | 448 |
| 5 வயதிற்குட்பட்ட விதவைகள் | 42 |
| 5 வயதிற்குள் தாரமிழந்தவர்கள் | 15 |

### கிறிஸ்தவர்கள்.

| | |
|---|---|
| மொத்த ஜனத்தொகை | 1380672 |
| கலியாணஞ்செய்த ஆண்கள் | 276936 |
| கலியாணம் செய்த பெண்கள் | 288636 |
| விதவைகள் | 93942 |
| தாரமிழந்தவர்கள் | 29118 |
| 5 வயதிற்குட்பட்டு கலியாணஞ் செய்த ஆண்கள் | 172 |
| 5 வயதிற்குட்பட்ட கலியாணஞ்செய்த பெண்கள் | 316 |
| 5 வயதிற்குட்பட்ட விதவைகள் | 18 |
| 5 வயதிற்குட்பட்டதாரமிழந்தவர்கள் | 7 |

குறிப்பு:—கிறிஸ்தவர்களிலும் 5 வயதிற்குட்பட்டு விவாகமானவர்களும், விதவைகளும் தாரமிழந்தவர்களும் இருக்கிறார்கள் என்று ஆராயுமபோது ஆச்சரியமாயிருக்கிறது. இதை நம்புவதற்கும் முடியாமலிருக்கிறது. ஒருக்கால் அதை வாஸ்தவமென்று எண்ணிஞலும் கூட, புதிதாக மதமாறிய ஹிந்துக்களின் செய்கையாகும். கிறிஸ்தவர்களில் எவ்வளவு செல்வச் செருக்கிலிருந்தாலும், அதிபாலியத்தில் கலியாணஞ்செய்ய மாட்டார்கள். இது மகா பாதக மென்றும், அசட்டுத்தனமென்றும் கிறிஸ்தவர்கள் எண்ணி அடியோடு வெறுக்கக் கூடியவர்கள்.

## விருதுநகர்.

### நகர பரிபாலன சபை தேர்தல் சம்பவங்கள்.

### பணிவான வேண்டுகோள்.

### நாடார் மஹாஜன சங்கம் எதிர்கொண்டு அன்புடன் அழைக்கிறது.

விருதுநகர் நகர பரிபாலன சபை தேர்தல் பிணக்குகள் விஷயமாய் நமது நாடார் குல மித்திரனில் வெளியாகியுள்ளன.

பிணக்குகளை ஒழித்து சமாதானப் படுத்த வேண்டுமென மித்திரன் அதிபர் மெத்தப் பிரயாசை பன்முறையெடுத்தும் பயன்தரவில்லை யென்று அறிந்து மிகவும் வருந்துகிறோம். ஆயினும் முயற்சி திருவினையாக்குமென்று அதிபரவர்கள் இன்னும் பிரயாசை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இடையில் என்னுடைய அபிப்பிராயத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் பெரியோர்கள் முதலிலேயேஒருவருக்கொருவர்நேரில் கலந்திருந்தால் பிணக்குகள் இப்படி பிரமாதமாகி இவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக் காரணமில்லை என்றும் பொது ஜனங்களின் அபிப்பிராயமாகும்.

ஏதோ ஊழ்வினைப்பயன் காரணமாக பிணக்குகள் உண்டாகி வழக்குகள் நியாயமன்றங்கள் ஏறியது. பொருளும் காலமும் வீணுகியது. தற்கால நீதிஸ்தலங்களில் நீதிபெற வேண்டுமாயின் தங்கக் கைகளும், இரும்புக்கால்களும் வேண்டுமென்று ஒரு பெரியார் சொல்லியுள்ளபடி செலவழிக்க பெட்டியில் பணமும் கடப்பதற்குச் சக்திகாதகால்களும் இருந்தாலும் கூட ஊழ்வினை விதிப்படியே காரியம் நடைபெறுகிறதென்பதைக் கண்டு கொண்டோம். விவாதப்போர் காரியங்களுக்காக ஒரு ரூபாய்ச்செலவு தானே ஆகும். ஒருகை பார்த்து விடுவோம் என்று எண்ணிச்செய்தால் ஒன்பது ரூபாய்க்கு மேலே செலவாகியும் காரிய சாதனம் கிடைக்கவில்லை யாதலால் வம்பு வழக்கென்றால் பணப்பெட்டியை நன்றாய்ப் பூட்டி சாவியை குடும்பத்தில் பண அருமை தெரிந்த பெரியோர்களிடம் சமர்ப்பிப்பதே நீதிக்கும் தர்மத்துக்கும் சத்தியத்துக்கும் நலமென்று கண்டோம்.

உலகத்திலேயே முதன்மையான பணக்காரர் மோட்டார்வண்டிச்சொந்தக்காரரான ஹென்ரி போர்டு என்பவராவர். அன்னவர் என்ன சொல்லுகிறார்? ஜனங்கள் தம்மை விரும்பினல் அமெரிக்க ஜனதிபதி (குடியரசர்) ஸ்தானத்திற்கு நிற்பேன். ஆனல் அதற்காக ஒரு தம்படியும் செலவு செய்ய முடியாது என்று சொல்கிறார்.

உலகத்திலேயே பெரியகோடீஸ்வரரான இவர் ஏன் இப்படிச்சொல்ல வேண்டுமென்று கவனித்தால் கௌரவ உத்தியோகத்துக்காக ஒரு சல்லி செலவு செய்தாலும் அது சிறந்ததாக மாட்டாதென்று ஆழ்ந்த யோசனையில் தெரிந்து கொண்ட உண்மையான விஷயம் என்றே யூகம் செய்வதோடு அநுபவத்திற்கும் பொருத்தமானதாக விருப்பதாகவே சொல்லவேண்டும்.

விருதுநகர், ஊராட்சிசபை தலைவரின் இவ்வருஷத்தேர்தல் முடிவுற்றது. பத்தாவது பகுதிதேர்தல் பல குழப்பங்கொண்டு தவிக்கிறது. இத்தேர்தலுக்காக இன்னும் மேலும் மேலும் பணத்தைச் செலவு செய்து வம்பாடுகள் பட்டாலும் அதுவும் ஊழ்வினை விதிப்பிரகாரமே முடியுமே தவிர அவரவர் நினைப்புப்படி முடிவது அசாத்தியமென்பது நிச்சயம். ஆகவே இது சமயம் அன்பு ஊடல் வேண்டும். தேர்தல் பிணககுகளுக்குள்ளான பெரியோர்கள் இதுவரை அனுபவித்த கஷ்டங்களையும், செலவு செய்த பணத்தையும் நினைத்துமனம் வருந்துவதால் நலன் விளையாது. தம்மை ஒருவர் மிக இழிவாயப் பேசியதை யறிந்த விவேகானந்த சுவாமிகள் என்ன சொன்னாரென்றால், இது என் முன்னோர்கள் செய்த பழிகளுக்கு ஒரு சிறு பரிகாரமாகுமே தவிர வருந்துவதில் பயனில்லை என்றார். அதுபோலவே நாமும் இதுவரை செய்த உழைப்பும், பணச்செலவும் நமதுமுன்னோர்களும் நாமும் செய்த பாவங்களுக்கு ஒருசிறு பரிகாரமென்று எண்ணுவது சாலச் சிறந்ததாகும்.

இனி ஆகவேண்டியதென்னை? பத்தாவது பிரிவுக்கு நிற்பவர்கள் ஸ்ரீமான் பெ. சி. சிதம்பரநாடார் அவர்களும் ஸ்ரீமான் கா. பழனிச்சாமிநாடார் அவர்களுமேயாகும். ஸ்ரீமான் பெ சி. சிதம்பரநாடார் அவர்கள் கடமை என்னும் சட்டைற்ற முன் வந்ததிலிருந்து விருதுநகரிலுள்ள க்ஷத்திரியப் பெண் பாடசாலை விஷயமாய் அல்லும் பகலும் உழைப்பதுவும், இன்னும் தேச சமூகத் தொண்டுகள் பல அருமையாகவும் அற்புதமாகவும் செய்து வருவதும் கண்ணாரக்கண்டு காதாரக்கேட்டு மகிழ்வெய்தியவர்பலர். இவருக்கும் போட்டியாக நிற்கும்படியான விஷயங்கள் நிகழ்ந்து விட்டதே என்று இருசார்பாருமே கவலை கொள்கிறார்களென்றால் இவர்பால் எவ்வளவு அன்புஇருக்க வேண்டும்! ஸ்ரீமான் கா. பழனிச்சாமி நாடார் அவர்கள் பொது விஷயத்தில் கலந்து கொள்ள விருப்பம் கொண்டுள்ள அன்புள்ள நண்பர் இன்னவர் ஸ்ரீமான் சிதம்பரநாடார் அவர்களுக்கு போட்டியாக நிற்கும் படியானதும் ஊழ்வினையின் பயன் என்றே கருதுதல் பொருந்தும்.

தேர்தலுக்காக வாக்காளர்களிடம் வாக்குரிமை கேட்டால் உங்களுக்கே வாக்கு கொடுக்கிறோமென்று இருபேருக்குமே வாக்காளர்கள் வாய் மொழி கூறுவர். தேர்தல் நடத்தினலும் ஜெயிப்பவர் ஒருவரே. ஆனதால் இனியும் தேர்தல் நடைபெறவேணுமென்ற நோக்கம் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிராமல் ஒருமகான் விட்டுக்கொடுப்பதே சிறந்ததாகும்.

இருவரும் சென்ற விஷயங்களை மனதில் எண்ணிக் கொண்டிராமல் ஸ்ரீமான் கா. பழனிச்சாமி நாடார் அவர்கள் மனமுவந்து ஸ்ரீமான் பெ. சி. சிதம்பரநாடார் அவர்களிடம் நேரில் சென்று விட்டுக் கொடுக்கும்படி கேள்க்கவேண்டும். ஸ்ரீமான் பெ. சி. சிதம்பரநாடார் அவர்கள் மனமுவந்து விட்டுக் கொடுத்து ஸ்ரீமான் பழனிச்சாமி நாடார் அவர்களை கவுன்சிலராக்கி வைக்க வேண்டும். நியாய மன்றங்களிலுள்ள வழக்குகளை அவரவர்கள் திறத்திக்கொள்ள வேண்டும். ஸ்ரீமான் கா. பழனிச்சாமிநாடார் அவர்கள் கவுன்சிலரானவுடன் இருதரப்பாருக்கும் சாதாரண முறையில் விருந்தொன்று நடத்தவேண்டும்.

நாட்டின் நலத்தை நாடி விட்டுக் கொடுப்பவர்களின் கௌரவம் ஒரு நாளும் குன்றாது. சட்டசபை நுழைவு விஷயமாய் தேச மஹாநாட்டில் வாதம் நிகழ்ந்த போது மகாத்மாஜீ சட்டசபை நுழைவு வேண்டாமென்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தேசபந்து தாஸ் கட்சியார் ஏற்றுக்கொள்ளாமல் கோபத்தால் வெளிச்சென்றனர். அதிகப் படியான வாக்கு தமக்கு இருப்பதேயும் கூட மாகாத்மாஜீ பொருட்படுத்தாமல் தாழ்மையுற்றேன்; தோல்வியடைந்தேன் என்று தேசத்தின் துர்ப்பாக்கிய நிலையைநினைந்துகண்ணீர் விட்டு மனம் உருகி சட்டசபை நுழைவுக்கு விட்டுக் கொடுத்தார். இதனால் மகாத்மாஜீயின் கௌரவம் குறைந்து விடவில்லை. மகாத்மாஜீயின் நிர்மாணத்திட்டத்தின் மேல் நாளுக்கு நாள் நிமிஷத்துக்கு நிமிஷம் அன்புபெருகி வருகிறது. அமெரிக்கா முதலிய வெளிநாட்டார் மகாத்மாஜீயைப்பற்றி ஆராய்ச்சி செய்யக் கிளம்பி விட்டார்கள். இமயமலை குணமாலையை, சருணைக்கடலை, கண்காணும் தெய்வத்தை சமீபத்தில் பேட்டி கண்டு பேசிய அமெரிக்கர் ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்று நவசக்தி ஆடி மீ 8 உ 40வது இதழ் 5-வது பக்கத்தில் "காந்தியை என் மறக்க வில்லை" என்ற தலைப்பின் கீழ் பிரசுரமாகியுள்ளது. காந்தியடிகளின் ஒளி நாளுக்கு நாள் பிரகாசமாகி வருகிறது. ஸ்ரீமான் பெ. சி. சிதம்பரநாடார் அவர்கள் விட்டுக்கொடுப்பதால், அவர்களுடைய புகழ் நாளுக்குநாள் விர்த்தியாகுமே தவிர குறைவுறாது.

இன்னும் ஒரு விஷயம். விருதுநகர் சுமார் இருபத்து இரண்டாயிரம் (22000) ஜனத்தொகையுள்ளது. விருதுநகர் ஊராட்சி சபையில் அங்கத்தினராகவிருப்பதால் சுமார் 22000 ஜனங்களின் நன்மையைக் கோருகிறவர்களாகத்தான் பாவிக்கலாம். ஆனல் இதில் அங்கத்தினர் பதவியடைய சிரமம் உண்டு.

நமது நாடார் மஹாஜன சங்கம் சுமார் 13 லட்சம் ஜனத்தொகை கொண்ட ஒரு சமூகத்தின் நன்மைக்காக உழைக்கிறது. இச்சங்க கவுன்சிலராக விருந்தால் ஜனத்தொகையை பொறுத்தமட்டில் விருதுநகர், நகர பரிபாலன சபையைப்போல் சுமார் சுமார் 59 நகரபரிபாலன சபைகளுக்கு கவுன்சிலராக விருந்து உழைத்த பாக்கியமும், புண்ணியமும் கிடைக்கும். நமது மஹாஜன சங்க கவுன்சிலராகுவதவும் கஷ்டமில்லை. சங்கத்தின் சட்டதிட்டப்படி வருஷம் ஒன்றக்கு ரூபாய் (12) பன்னிரெண்டு செலுத்தி விட்டால் உடனே கவுன்சிலராகிவிடலாம்.

தற்சமயம் நமது சங்கத்துக்கு பெரியோர்கள் நண்பர்களின் ஒற்றுமைழப்பு ஏராளமாகத் தேவை யிருக்கிறது. இதற்காக நமது மஹாஜன சங்கம் எல்லோரையும் இருகரமேந்தி அன்புடன் அழைக்கிறது. தயவு செய்து நமது மஹாஜன சங்கத்தின் வேண்டுகோளுக்குச் செவி சாயுங்கள். ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள்.

நமது மஹாஜன சங்கத்தில் நடத்தும் யோகச் சிட்டுக்கு பல இடங்களிலும் தகுந்த உதவி செய்திருப்பதாகத் தெரிகிறது. சமூக சேவையில் முன் அணியில் நின்ற விருதுநகர் யோகச்சிட்டு விஷயத்திலும் தன் கடமையை முழு மனதுடன் செய்துவைக்க எல்லோரும் கிருபை செய்யவேண்டிய தவசியம்.

இக்கட்டுரையில் ஏதேனும் குற்றம் குறைகளிருப்பினும் தயவுசெய்து மன்னித்துக்கொள்ளும்படி இருகரம் குவித்து சிரம்தாழ்த்துகிறேன்

க. பெ. சங்கரலிங்கம்,
பங்கஜவிலாஸ்,
விருதுநகர்.

குறிப்பு:—இம் மேலான நோக்கத்துடன் பத்திரிகைகளுக்கு எழுதுவதைப் பார்க்கிலும் அவரவர்கள் நேரில் சொல்லிக்கொள்வது மிக்க நலந்தரக் கூடும். சமாதானப் பிரியர்கள் இன்னும் நன் முயற்சி செய்து பார்க்கலாம். அருமையான நேரத்தை பத்திரிகைகளுக்கு எழுதிக்கொண்டிருந்து விட்டு அவசரம் தவறிவிடாமல் ஒரு சமாதானக் கூட்டம் வைத்து ஒரு முடிவுக்கு வர நிருபர்கள் முயற்சி செய்வார்களாக. ப—ர்


## எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

ஸிவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ், அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவஸியம். 3-ம் பதிப்பு விலை அணு 14. இது ஆசிரியரிடமும, சென்னைவேப்பேரி, எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

ஜேம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணு; 2-ம் புஸ்தகம் 8 அணு. 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவஸியம். ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியா எஸ். வி. கோயில்பிள்ளையிடமும் ஆரணி மிஷின் பிரஸிலும், ஷை சென்னை எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜதைக்குமேல் விசேஷித்த கமிஷன்.

## மகாத்மா

# அபூர்வ புருஷர்,

### ஓர் அமெரிக்கரின் வர்ணனை.

மிஸ்டர் மார்க்ஸ் வார்தல் "மெஸஞ்சர்" என்ற அமெரிக்கப் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:—

மகாத்மா காந்தி திடீரெனத் தோன்றினர்; எல்லாருடைய மனதையும் கவர்ந்தார். இப்போது மறைந்துவிட்டார் என்று சொல்வது பிசகு. ஒத்துழையாமை இயக்கம் தவறிவிட்டதால் மோஹனதாஸ் கரம்சந்த் காந்திக்கு ராஜீய, ஸன்மார்க்க, பாரமார்த்திகத் துறைகளில் செல்வாக்கற்றுப் போய்விட்டதாக யாரும் கருதவேண்டாம்.

இந்தியாவில் எந்த மூலைக்குப்போனாலும் அவருடைய பெயரே அடிபடுகின்றது. சத்ருக்களாலும், நண்பர்களாலும் முறையே தோற்கடிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட ஒருவரை ஜனங்கள் இன்னமும் கொண்டாடுவதை நான் பார்த்தவுடனே, அப்படிப்பட்ட மனிதரை நாம் அவசியம் பார்க்கவேண்டும் என்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. எனவே நான் நாடெங்கும் சுற்றித் திரிந்துவிட்டு இந்திய ரிஷியாகிய காந்தி வீற்றிருக்கும் ஆமதாபாத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

ஆமதாபாத் நகரம் அவரைப்போன்றவருக்கு ஏற்றதல்ல. அது காசியைப் போலல்ல; யாத்திரை ஸ்தலமல்ல; புத்தருக்கு ஞானோதயமான கயாவைப்போலுமல்ல. ஆக்ராவைப்போல் அழகிய மசூதிகளும், கோரிகளும் நிறைந்த இடமல்ல. பண்டைக்கால நாகரீக சின்னங்கள் எதையுமே ஆமதாபாத்தில் காணோம். ஆமதாபாத் அழுக்கு நிறைந்த பட்டணம். பெரிய வர்த்தகஸ்தலம். காந்தியை நாடுவோருக்கு அவ்வூர் சிறிதும் தகாது. ஆகையால் அவஸரமாக காந்தியைத் தரிசிக்கும் பொருட்டு அந்நகரை விட்டு நீங்கி ஸபர்மதி தீரத்தைக் கடந்து காந்தி ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தோம்.

அங்கு ஒரு சிறு செங்கல்வீடு ஆற்றங்கரையோரம். மகாத்மாவின் முன்பாக நாங்கள் கொண்டுபோய் விடப்பட்டோம். அவர் ஒரு பழய கால ராட்டினத்தில் நூல் நூற்றுக்கொண்டு கால் மீது கால் போட்டுக் கொண்டு சப்பளிக்க உட்கார்ந்து கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் எழுந்திருந்து, இந்தியத்தோரணையில் நமஸ்காரம் செய்து, பிறகு மேனாட்டுத் தோரணையில் வலதுகையை நீட்டி வரவேற்றார். இடுப்பில்மட்டும் ஒரு சிறு துண்டு கட்டியிருந்தார். அவருடைய உயரம் 5 அடி 8½ அங்குலமிருக்கும். உயரத்துக்குத் தகுந்த பருமன் இல்லை. அவருடைய சரீரத்தின் எடை 102½-பவுண்டுதான். உடம்பு மெலிந்திருந்த போதிலும், ஒரு விதமான தேஜஸும், கம்பீரமும் அவரிடத்தில் காணப்பட்டன. அவருக்குப் பெரியதலை; அபாரமூளை; ஆனால் வெறிபிடித்தவரல்ல. மிகவும் நல்லவர்; மனோ உறுதியுள்ளவர். காதுகளுக்கு இடையே அகன்றிருக்கிறது. தாட்சண்யமற்றவர். காதுகள் மிகப்பெரியவையாயும், பிரபலமாயும் விளங்குகின்றன. மிக்கமெலிந்த சரீரமுடையவராயிருந்தாலும், தைரியமும், உறுதியும், சுறுசுறுப்பும் விசேஷமாக உண்டென்று அவருடைய அங்கங்கள் பேசுகின்றன. அவருடைய மூக்குப் பருத்தும் நீண்டும் உதட்டுப்பக்கத்தில் கொஞ்சம் சப்பையாகவும் இருக்கிறது. அதைப் பார்த்தாலே அவர் மிகுந்த உணர்ச்சியுள்ளவர் என்று தெரிகிறது. வாய்ப்பக்கம் தடிப்பாகவும், கீழ் உதடு பல்லுக்கு மேலே கொஞ்சம் வளைந்தும் இருக்கின்றன. முகத்தில் காருண்யம் ஜொலிக்கின்றது. கண்கள் பளிச்சென்று பிரகாசிக்கின்றன. மிக்க இரக்கமுள்ளவர். தலைமயிர் கத்தரிக்கப்பட்டிருக்கிறது. அது சாம்பல் வர்ணமாகவும், கம்பிபோல் சுருண்டும் இருக்கிறது.

எங்களை வரவேற்ற பிறகு அவர் மீண்டும் நூற்க உட்கார்ந்து கொண்டார். பேசிக்கொண்டே நூற்றார். ஒருமணி நேரம் பேசினோம். ஒரு புறத்தில் ராட்டினநாதமும், வெளியே மாமரத்தில் பட்சிகளின் கூவலும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அமெரிக்கா எந்த விதத்திலாவது உபயோகமாயிருக்குமாவென்று நான் கேட்டேன். மகா சுத்தமான ஆங்கிலத்தில் மிருதுவாக அவர் பதிலளித்தார். "அமெரிக்கா முதலிய பெரிய தேசங்கள் எங்களுடைய தேவைகளையறிந்து எங்களிடத்தில் அனுதாபங் காட்டுவதன் மூலமாய், இந்தியர்களாகிய எங்களுக்குப் பலவிதமான தியாகங்கள் செய்ய ஒரு சக்தியும் தைரியமும் பிறக்கின்றது" என்று அவர் சொன்னார்.

அமெரிக்காவுக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்னவென்று நான்கேட்டேன். அவருடைய கண்கள் ஜோதிமயமாக விளங்கின. "இந்தியாவைப் பற்றிய உண்மையை அமெரிக்கர் அறிந்துகொள்ளவேண்டும். தவறான அபிப்பிராயங்கள் கூறும் பத்திரிகை மூலமாக அல்ல. சுதந்தரத்திலும், சத்தியத்திலும் நம்பிக்கையுள்ளவர்களின் வாயிலிருந்து அந்த உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று மகாத்மா மறுமொழி பகர்ந்தார்.

என்றைக்காவது ஒருநாள் தாங்கள் அமெரிக்காவுக்கு வரமாட்டீர்களாவென்று கேட்டேன். "வருவதாகத்தான் உத்தேசம்; ஆனால் இந்த சமயத்தில் சௌகரியமாயில்லை. இங்கு வேலை அதிகமாயிருக்கிறது. அநேகம் பேரை இந்த ஆச்ரமத்தில் தேசத் தொண்டுக்குத் தயார் செய்துவருகிறோம். இங்கு 200-பேர் இருக்கிறார்கள். அவர்கள் தேசத் தொண்டிற்கே தங்கள் வாழ்நாளை அர்ப்பணம்செய்தவர்கள்" என்று சொன்னார். இந்தியாவை இனிக்காப்பாற்றப் போகிறவர் அவர்கள் தானாவென்றேன். "அப்படிச் சொல்லமுடியாது; இந்தியாவின் ஊழியர்களாக அவர்கள் இருப்பார்களென்பது நிச்சயம்" என்று விடையளித்தார்.

உலக குரு ஒருவர் சீக்கிரத்தில் தோன்றப் போவதாகவும், பிராமணச் சிறுவனாகிய கிருஷ்ண மூர்த்தியையே அவர் கூடாகக்கொள்வாரென்றும் மிஸஸ் பெஸண்டு சொல்லுவது உங்களுக்குத் தெரியுமாவென்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டு "ஆம் கேள்விப் பட்டேன்; ஆனால் எனக்கு அந்த விஷயத்தில் சிரத்தையில்லை. குருக்களும், தீர்க்கதரிசிகளும் பல சமயங்களிலும்தோன்றிமனிதருக்குஉதவியிருக்கிறார்கள். மறுபடியும் அவர் தோன்றலாம். லோககுரு வரக்கூடிய விஷயத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஒரு சிஷ்யன் அல்லது அந்த சிஷ்யனுடைய சரீரத்தைத்தான் அவர் கூடாகக்கொள்வாரென்று கூறுவதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. பிரம்மஞான இயக்கத்தில் எனக்கு அனுதாபம் கிடையாது" என்று மகாத்மா சொன்னார். முன்னொரு சமயத்தில் அவர் பிரம்மஞானியாக இருக்கவில்லையாவென்று கேட்டேன். "அது வாஸ்தவம்; பிரம்மஞான இயக்கத்தைத் பரப்ப தென்னாப்பிரிக்காவில் 1 வாரம் நானும் வேலைசெய்தேன். இன்னமும் நான் பிரம்மஞானிதான்; ஆனால் இயக்கம் எனக்குப் பிடிக்கவில்லை; ரகஸ்யமாக ஒன்றை வைத்துக்கொள்ளும்படி போதிக்கும் எந்த ஸ்தாபனமும் எனக்குப் பிடிக்காது. அது ஜனநாயகத் தன்மை பொருந்தியதாயில்லை. எல்லாம் பஹிரங்கமாக நடக்கவேண்டும். எல்லா வகுப்பினரும் எனக்கு சமம்" என்றார் மகாத்மா.

இடது கையில் பஞ்சும், வலது கையில் ராட்டினமும் தாங்கி, அவர் அமைதியாக, ஞான ஒளியுடனும், மெல்லிய கழுத்தில் ராட்டினமும் தொங்குவதுபோல் காணப்பட்ட கனமான தலையுடனும், உட்கார்ந்து கொண்டிருந்ததை நான் பார்த்தகாலையில், இவர்தான் இந்தியாவோ! இந்தியாவின் பழம்பெரும் நாகரீகமே உருவெடுத்து வந்தவரோ! நீண்ட காலமாக அடிமைப்பட்ட இந்தியாவின் சின்னம் இவர்தானோ! என்று நான் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன். இந்தியாவின் தரித்திரமும், இந்தியாவின் அடிமைத்தனமும், இந்தியாவின் செல்வமும், இந்தியரின் பக்தியும், அபூர்வ ஞானமும் ஏககாலத்தில் என் கண்ணெதிரே பட்டது போல் தோன்றிற்று.

---

## க்ஷத்திரியகுல
### சன் மார்க்க பூஷணம்.

இதுவரையும் அநேகர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த க்ஷத்திரியகுல சன்மார்க்க பூஷணம். தயாராய்விட்டது. சொற்பகாப்பிகள்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நூற்றுக்கணக்கான ஆர்டர்கள் கைவசமிருக்கின்றன. வேண்டுவோர் விரைவில்எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**புத்தகம் 1-க்கு விலை அணா 4.**

டஜன் 1-க்கு ரூ 2—8—0. நூற்றுக்கு 20 புத்தகம் அதிகம் சேர்த்துக்கொடுக்கப்படும். வி. பி. சார்ஜ் வேறு. 1, 2, புஸ்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. புஸ்தகம் 1-க்கு 4½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்ட்டில் அனுப்பப்படும்.

விலாசம்:—

"நாடார்குல மித்திரன்" புத்தகசாலை.

அருப்புக்கோட்டை.




## "எம்பயர் பாம்."

எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire Balm"

ஏஜெண்டுகள் தேவை.

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம், மனுபாக்சரிங் கம்பெனி என்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும்

கீழமாரட்டு வீதி, மதுரை

ஜெகமெங்கும் புகழ் பெற்ற
அசல் சேட்
இ. பி. குமரவேல்



நயம் பீடிகள்

அன்பிற் சிறந்த கனவான்களே!

நாம் எல்லோரும் வெகு நாளாக நமது அசல் சேட் இ. பி குமாரவேல் பீடிகளை தவிர மற்ற போலி பீடிகளை உபயோகப்படுத்த மாட்டோமென்பது நிச்சயமாய்த் தெரிந்தும் சிலர்கள் போலி பீடிகளைக் கொண்டு ஊர் தோறும் பல பல பெயர்கள் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

ஆனதால் நமது அசல் சேட் இ. பி. குமரவேல் பீடி கட்டுகளில் ஒட்டி இருக்கும் லேபில்களை கவனமாய்ப் பார்த்து இ. பி. குமரவேல் பீடிதானா என்று கவனித்து வாங்கி உபயோகப்படுத்தி ஆனந்தியுங்கள்.

புரோப்ரைட்டர்ஸ்,

**இ. பி. குமரவேல் பீடி கம்பெனி**

பிராஞ்சுகள்:—

செகன்றாபாத்து, ஐதராபாத்து & கொல்லம் } ஹெட்டாபீஸ், மூக்கூடல்.

மேலே குறிப்பிட்ட எங்கள் பிராஞ்சுகளில் நயம் பீடி பல தரங்கள் தயார்செய்து தூர தேசங்களுக்கு V. P. மூலமாயனுப்பி பெரும் கியாதியோடு நடந்தேறிவருகிறது. வேண்டியவர்கள் விபரம் எழுதி கேட்கவும்.

கைக் குறுதி வேல் வாள்.

மெய்க் குறுதி வாய்மை தூய்மை.